பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 13 வியாழக்கிழமை (27-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:121

# குடாரப்பு தரையிறக்கத் தாக்குதல் போரியல் வரலாற்றில் திருப்புமுனை

## தளபதி பால்ராஜ் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்27

தமிழீழ போரியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை குடாரப்பு தரையிறக்கம்.

-இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் மூத்த தளபதி கேணல் பால்ராஜ்.

ஆனையிறவு பெரும் தளம் மீது கடந்த 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் புலிகள் பெரும் தாக்குதல் தொடுத்து அந்தத் தளத்தை அடியோடு துடைத்தழித்தனர்.

'ஓயாத அலைகள் - III' எனப பெயரிட்டு புலிகள் தொடுத்த அந்தத் தாக்குதலில் அவர்கள் ஈட்டிய வெற்றிக்கு வழிகோலியது குடாரப்பு கடற்கரையோரத்தில் நடத்தப்பட்ட தரையிறக்கத் தாக்குதல் ஆகும்.

குடாரப்பில் புலிகளின் பெரும் அணி ஒன்று கடற்படையினரின் வேலிகளை ஊடுருவி உடைத்துக் கொண்டு குடாரப்பில் தரையிறங்கி அங்கிருந்து இயக்கச்சி வரை முன்னேறி ஆனையிறவுத் தளத்தை முற்றுகையிட்டது.

இந்தத் தரையிறக்கத் தாக்குதலின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் நேற்று ஆகும்.

இதனை ஒட்டிய நினைவுக் கல் திரைநீக்க வைபவம் நேற்று மாலை குடாரப்பில் இடம்பெற்றது.

தளபதி பால்ராஜ் நினைவுக் கல்லைத் திரை நீக்கம் செய்து உரையாற்றினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

எதிரி பெரும் எடுப்பிலான படையெடுப்பு ஒன்றை நடத்தி வன்னிப் பெருநிலப்பரப்பினை துண்டாட ஆயத்தமாகி வந்த வேளையில் 'ஓயாத அலைகள் - III' நடவடிக்கை ஆரம்பிக்கபட்டது. வன்னியின் பல பகுதிகளை ஸ்ரீலங்கா படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டவாறு முன்னேறினோம். ஆனையிறவு பெரும் தளத்தை வீழ்த்துவதற்காக குடாரப்பில் ஒரு தரையிறக்கத்தினை மேற்கொண்டு 34 நாள்கள் எதிரியுடன் போராடி ஆனையிறவை வெற்றி கொண்டோம்.

கடல் வழியாக குடாரப்பில் தரையிறங்கி முன்னேறி ஆனையிறவுத் தலத்துக்கான விநியோகங்களைத் துண்டித்து களமாடி வீழ்ந்த மாவீரர்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது. நாம் அனைவரும் ஒன்றுபட்டு எமது தாயக விடுதலைக்காக போராடுவதே அந்த மாவீரர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதையாக இருக்கும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் வந்திருந்த சமயம்

# இராணுவத் தாக்குதல் அணி புலிகள் பகுதிக்குள் ஊடுருவல்!

## வன்னிக்காட்டில் போராளிகள் சல்லடை கண்காணிப்புக் குழுவினருக்கும் முறையீடு

கிளிநொச்சி,மார்ச்27

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியாரும் இம்மாத முற்பகுதியில் வன்னிக்கு வந்து தங்கியிருந்த சமயம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணி(Deep Penetrate Reconnaissance Unit) 'நைஸாக' ஊடுருவி இருந்ததாகக் கூறப்படுகிறது.

இது குறித்து மோப்பம் பிடித்து அறிந்துகொண்ட விடுதலைப் புலிகள் வன்னிக் காட்டில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியதோடு, தமது போராளிகளை முழு உஷார் நிலையில் வைத்து பேரனர்த்தம் ஏதும் நிகழாமல் உறுதி செய்துகொண்டனர் என அறியவருகின்றது.

இராணுவத் தாக்குதல் அணி ஊடுருவியிருப்பது பற்றிய உளவுத் தகவல்களும் துப்பும் தமக்குக் கிடைத்திருப்பது குறித்துப் புலிகள் கண்காணிப்புக் குழுவினருக்கும் முன்கூட்டியே முறைப்பாடு செய்திருந்ததாகவும் அறியவருகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)



பக்தாத் நகரில் கடைத் தொகுதிக் கட்டடம் ஒன்றின் மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 14 ஈராக்கிய பொதுமக்கள் உயிரிழந்தனர்; 30 பேர் வரை காயமடைந்தனர். குண்டுவீச்சுக்கு இலக்கான கடைத் தொகுதியைப் படத்தில் காணலாம். (ஐ)

## நாரந்தனைப் படுகொலை வழக்கில்

# தலைமறைவாகி உள்ள நெப்போலியனுக்கு வவுனியா மேல் நீதிமன்று பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்27

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பிரசாரப் பணிக்காகத் தீவகம் நோக்கிச் சென்ற தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாரந்தனையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவத்தில் முதலாவது எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. இராணுவத்துறைப் பொறுப்பாளர் நெப்போலியனைப் பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவை வவுனியா மேல் நீதிமன்றம் யாழ்நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ளது.

இந்த உத்தரவு யாழ்.நீதிமன்றத்துக்கு நேற்றுக் கிடைத்தது.

நாரந்தனைச் சம்பவத்தை அடுத்து தலைமறைவாகி இருந்தார் நெப்போலியன். அவரைக் கைதுசெய்ய நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில், கொழும்பு நீதிமன்றத்தில் சரண் அடைய அனுமதிக்க வேண்டும் என்றுகோரி அவர் சார்பில் மனு ஒன்று அண்மையில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் வவுனியா மேல் நீதிமன்றததுக்கு இந்த மனுவைப் பாரப்படுத்தியிருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் பிரச்சினை, தலைமன்னார் பாலம் குறித்து

# அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று தமிழக முதலமைச்சருடன் பேச்சு

கொழும்பு,மார்ச்27

பொருளாதார, மறுசீரமைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார். அமைச்சர் மொறகொட நேற்று தமிழ்நாட்டுப் பயணத்தை மேற்கொண்டார்.

அமைச்சர் மொறகொட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியாகவே தமிழக முதலமைச்சருடன் பேச்சு நடத்துவார்.

மூன்று பிரதான விடயங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தனித்தரப்புக் குறித்து முஸ்லிம் எம்.பிகள் நோர்வேத் தூதரிடம் மீண்டும் வலியுறுத்து

## இரு தரப்புடனும் பேசி ஆவன செய்வதாகத் தகவல்

கொழும்பு,மார்ச்27

வடக்கு - கிழக்கு முஸ்லிம நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் நேற்றுப் பிற்பகல் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

அரசும் விடுதலைப் புலிகளும் நடத்தும் சமாதானப் பேச்சுக்களில் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்பதில் வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மிகவும் தெளிவாக இருப்பதாக முஸ்லிம் எம்.பிக்கள் தூதுவரிடம் தெரிவித்துக் கொண்டனர்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பெற்றோல் விலை மீண்டும் லீற்றருக்கு 2 ரூபா அதிகரிப்பு

கொழும்பு,மார்ச்27

நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் விலை மீண்டும் 2ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விலை அதிகரிப்பின்படி இதுவரை 51 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 53 ரூபாவாகும்(கொழும்பு விலை).

கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி பெற்றோல் விலை லீற்றருக்கு 2ரூபாவால் அதிகரிக்கப்பட்டது தெரிந்ததே. (ம)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முகாம் அமைப்பதை எதிர்த்து கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான சுப்பிரமணியம் பூங்காவில் படை முகாம் அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை உடனடியாக கைவிடவேண்டும் எனக் கோரி இன்று காலை கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்படவிருக்கின்றது.

நகர மத்தியில் இராணுவ முகாம் அமைக்கும் திட்டத்தை எதிர்ப்பதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு இந்த மகஜரை கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கும்.

இன்று காலை 9 மணிக்கு கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் மகஜர் கையளிக்கப்படும். இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

பிரதமர் மற்றும் ஆளுநருக்கான பிரதிகள் யாழ் அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன.

(ம-4)

# வெளிநாடுகளில் இருந்து திரும்பி வந்து மீளக்குடியமர்வோருக்கு உதவ அமைப்பு

## சர்வதேச நிறுவனம் தன் கிளையை இங்கு திறக்கிறது

யாழ்ப்பாணம்,மார்ச்27

வெளிநாடுகளில் இருந்து திரும்பி குடாநாட்டில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கும் நோக்குடன் சர்வதேச மீள்குடியமர்வு நிறுவனம் (IOM) என்ற அமைப்பு யாழ் நகரில் தனது கிளை அலுவலகத்தை எதிர்வரும் 4ஆம் திகதி திறக்கவிருக்கின்றது.

சர்வதேச நாடுகளில் இருந்து யுத்தம் காரணமாகவோ, அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டமை காரணமாகவோ தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பும் மக்களை மீள்குடியமர்த்தும் பணிகளில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

அதனடிப்படையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு நாடு திரும்புபவர்களை மீள்குடியமர்த்தும் பணிகளை மேற்கொள்ளவென இந்த நிறுவனம் தனது அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறக்கவிருக்கின்றது.

இந்த அலுவலகத்தை அந்த நிறுவனத்தின் ஜெனீவா தலைமையக அதிகாரியான புருன்சன் மைக்கினலே திறந்துவைக்கவுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து திரும்பிய எட்டுக் குடும்பங்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துள்ளதாகவும் -

மேலும் ஆயிரம் குடும்பங்கள் வரை மீளக்குடியமரும் என எதிர்பார்ப்பதாகவும் - அந்த நிறுவன அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ம-3)

# தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்தில் முல்லை, கிளிநொச்சி மாவட்டங்கள் இணைவு

திருகோணமலை,மார்ச்27

வடக்கு-கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் திருகோணமலையில் மேற்கொண்டுவரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களும் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். நேற்று கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

அதேவேளை -

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க திருமலை மாவட்ட உறுப்பினர்கள் பகுதி பகுதியாக இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, 24ஆம் திகதி முதல் போராட்டத்தில் இணைந்து வருகின்றனர். இன்று யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களும் போராட்டத்தில் இணையவிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 8 மாவட்டங்களையும் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் தற்போது திருமலையில் ஒன்றுகூடி போராட்டம் நடத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-20)







# ஈராக் யுத்தம் காரணமாக தேயிலை ஏற்றுமதி பாதாளத்தில்!

கொழும்பு,மார்ச்27

ஈராக் யுத்தம் காரணமாக இலங்கையின் தேயிலை வர்த்தகம் படுவீழ்ச்சி கண்டுள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் வாரந்தோறும் இடம்பெறும் தேயிலை ஏலவிற்பனையில் நேற்றும், நேற்றுமுன்தினமும் தேயிலையைக் கொள்வனவு செய்ய எந்த நிறுவனமும் முன்வரவில்லை.

இரு தினங்களும் 50 லட்சம் கிலோ தேயிலை ஏலத்துக்கு விடப்பட்டது. அதில் 40 சதவீதமான சுமார் 20 லட்சம் கிலோ மட்டுமே வெகு குறைந்த விலையில் விற்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் தேயிலை வர்த்தகம் இந்தளவுக்கு மோசமான நிலையை அடைந்தது கிடையாது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வருடத்தில் ஏப்ரல் மாதத்துக்கு முன்பே பெருமளவு தேயிலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கம் என்றும் -

ஈராக் போர் நீடித்தால் இலங்கையின் ஏற்றுமதியில் 75 சதவீத வீழ்ச்சி ஏற்படும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து ஈராக், சிரியா, சவூதி அரேபியா உட்பட மத்திய கிழக்கு நாடுகளே கூடுதலான தேயிலையை இறக்குமதி செய்கின்றன.

ஈராக் யுத்தம் காரணமாக இந்த நாடுகள் தேயிலைக் கொள்வனவை நிறுத்தியுள்ளதால் இலங்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதேவேளை - பெப்ரவரி மாதத்தில் கூடுதலான தேயிலை உற்பத்தி செய்யப்படுவது வழமையாகும் கடந்த காலங்களிலும் பார்க்க இந்த ஆண்டு கூடுதல் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதால், பல தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் தேயிலை உற்பத்தியாளர்களும் தொழிலாளர்களும் நஷ்டம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ம-3)

# நீதிமன்ற வளாகத்திலிருந்து 2 குடும்பங்களை வெளியேற்ற பணிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ். பிரதான வீதியில் முன்னர் நீதிமன்றம் அமைந்திருந்த வளாகப் பகுதியில் குடியமர்ந்த இரு குடும்பங்களை வேறு இடத்தில் குடியமர்த்துமாறு யாழ் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

வன்னியில் இருந்து திரும்பிய பத்துக் குடும்பங்கள் நீதிமன்ற வளாகப் பகுதியில் உரிமையாளரின் அனுமதி இன்றி வசித்து வந்ததாகவும் -

வளாகப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு அந்தக் குடும்பங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதில் எட்டுக் குடும்பங்கள் வெளியேறிவிட்டன என்றும் -

தொடர்ந்து இரு குடும்பங்கள் அங்கு வசித்து வருவதாகவும் - யாழ். பொலீஸார் யாழ். நீதிவானிடம் தெரிவித்தனர். அந்தக் குடும்பத்தினரையும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அவர்களை விசாரணை செய்த நீதிவான் மாற்று இடம் ஒன்றில் இவர்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும்படி யாழ்.அரச அதிபருக்கு உத்தரவிட்டார்.

(ம-3)

# மோ.சைக்கிள் - டிராக்டர் விபத்தில் இளைஞன் படுகாயம்!

செம்பியன்பற்று,மார்ச்27

மோட்டார் சைக்கிள் - டிராக்டர் இடையே நேற்றுமுன்தினம் உடுப்பிட்டிக்கும் வல்லைக்கும் இடையில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயிலடியைச் சேர்ந்த தண்டாயுதபாணி பிரகாஸ் (வயது 16) தலையில் பலத்த காயமடைந்தார். அவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறையிலிருந்து மூன்று பேருடன் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் உடுப்பிட்டிக்கும் வல்லைகுமிடையிலுள்ள வைரவர் கோயிலடியில் டிராக்டருடன் விபத்துக்குள்ளானது.

(ம-36)

# சமஷ்டி முறைகள் குறித்து அறிய புலிகளின் குழு ஒஸ்லோ பயணம்

கொழும்பு,மார்ச்27

சமஷ்டி ஆட்சி முறைகள் குறித்து ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் தூதுக் குழு ஒன்று ஸ்கண்டிநேவிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறது.

இக்குழுவினர் எதிர்வரும் 30ஆம் திகதி முதலில் ஒஸ்லோவுக்குப் பயணமாவார்கள். இக்குழுவில் 16 புலி உறுப்பினர்களும் ஐந்து கல்விமான்களும் அடங்கியிருப்பர்.

ஒஸ்லோ பயணத்தின் பின்னர் அவர்கள் சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்வர். (ம)

# பாதுகாப்பு வலயம் குறித்த விவரம் தருமாறு யாழ். தளபதிக்கு கடிதம்

## மனித உரிமை ஆணைக்குழு அனுப்பியது

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்று வரையறுக்கப்பட்ட இடங்கள் குறித்த விவரத்தைத் தெரியப்படுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினால் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இதுவரையும் 372 முறைப்பாடுகள் ஆணைக்குழு அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளதாகவும் -

அவை தொடர்பாகக் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டபொழுது அவை உயர் பாதுகாப்பு வலயம் என்று அங்குள்ள படை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதுடன் மேலதிக விவரங்கள் தேவையெனின் தமது மேலதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டதாகவும் -

ஆணைக்குழுவின் அதிகாரி ஆர்.பி.சந்திரசேகர தெரிவித்தார்.

இதனையடுத்தே தாம் நேற்று மேற்படி விடயம் தொடர்பான கடிதத்தை மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-10)

# பச்சிலைப்பள்ளியில் வாகனக் கணக்கெடுப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அனைத்து வாகனங்களினதும் கணக்கெடுப்பு நாளை வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து வாகன உரிமையாளர்களும் தமது வாகனத்துக்குரிய ஆவணங்களுடன் சமுகம்தந்து பதிவை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ம-3-117)




'சினியாத்ரா' திரைப்பட விழா நேற்றுமாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியது. இந்தவிழா எதிர்வரும் 30 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

நேற்றைய ஆரம்பவிழாவில் கலந்துகொண்ட திரைப்பட இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க உரையாற்றுவதையும் ஏனைய திரைப்பட இயக்குநர்கள் அமர்ந்திருப்பதையும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

விழாவையொட்டி அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சினிமாக் கலை சம்பந்தமான புத்தகங்கள் சிலவும் படத்தில் உள்ளன.

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் பட்டப்படிப்புகள் அலகு, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு, இலங்கை ஆசியத் திரைப்பட மையம் ஆகியவற்றுடன் இணைந்து திரிகோணகலை மையம் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

விழாவில் ஒரு தமிழ்ப் படமும் ஏழு சிங்களப் படங்களுமாக மொத்தம் எட்டுப் படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. *(படங்கள் : பத்மராஜ்)*

# போர் எதிர்ப்பு தீவிரம்



ஈராக் மீதான அமெரிக்கப் போரைக் கண்டித்து சிரியாவில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். அதிபர் புஷ்ஷுக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். போர் உடன் நிறுத்தப்படவேண்டும் என்று கோரினர். ஆத்திரங்கொண்ட அவர்களில் சிலர் பிரிட்டிஷ் கொடியை எரிப்பதைப் படத்தில் காணலாம்.



ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போரில் ஆஸ்திரேலியாவும் பங்கெடுத்துக்கொண்டுள்ளதற்கு ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாகாண மாணவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மாணவர்கள் பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# பக்தாத்தை நெருங்குகின்றன அமெரிக்கக் கூட்டுப் படைகள்!

ஈராக் மீதான போர் ஆரம்பமாகி 7நாள்கள் கடந்துவிட்ட நிலையில், மேற்குப் பக்கம் இருந்து முன்னேறிய அமெரிக்கப் படைகள் யூப்ரடீஸ் ஆற்றைக் கடந்து பக்தாத்தை நெருங்கி வருகின்றன. இராணுவத்தின் முன்னேற்றத்துக்கு வசதியாக சண்டை விமானங்களும் குண்டுவீச்சு விமானங்களும் தலைநகருக்கு வெளியே உள்ள ஈராக்கிய குடியரசுப் படைகளின் நிலைகள் மீது கடும் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஏவுகணைத தாக்குதலும் கடுமையாக நடக்கின்றது.

பக்தாத்தின் தெற்குப் பகுதியில் இருக்கும் குடியரசுப் படைகளின் நிலைகள் மீது நேற்று முதற்றடவையாக அமெரிக்க விமானங்கள் சரமாரியான குண்டுத் தாக்குதல்களை நடத்தின. பக்தாத்தின் உள்ளேயும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதனால எழுந்த புகைமூட்டம் பக்தாத்தை மூடியுள்ளதைக் காணக்கூடியதாக இருந்ததாக அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

எனினும், கடும் புழுதிப் புயல் காரணமாக நேற்று புதன்கிழமை அமெரிக்கப் படைகளின் முன்னேற்றம் நிறுத்தப்பட்டதாக பென்ரகன் அறிவித்தது. இதனால், அமெரிக்க இராணுவ நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

அதேசமயம், நஸிரியாவைக் கைப்பற்றியுள்ள அமெரிக்கப் படைகள் தென்கிழக்குப் பகுதியில் இருந்து பகதாத் நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. வழிநெடுகிலும் ஈராக்கியப் படைகளுடன் அவை சண்டைகளில் ஈடுபட்டுவருகின்றன. அவை குச் நகரை அண்மித்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நஜவ் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் 150 முதல் 300 வரையிலான ஈராக்கியப் படையினர் உயிரிழந்ததாக பென்ரகன் அறிவித்தது.

திங்களன்று அமெரிக்கப் படைகள் தமது இரு ஹெலிகளை இழந்த கர்பாலா என்ற நகரில் ஈராக்கிய குடியரசுப் படைகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையே கடும் சண்டை இடம்பெற்றது. இந்த நகரம் பக்தாத்தில் இருந்து 80 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவை தொடர்ந்தும் பிரிட்டிஷ் படைகள் சுற்றிவளைத்துக் கொண்டுள்ளன. அங்கு கடுமையான ஆட்லறித் தாக்குதலையும் அவை நடத்தி வருகின்றன. மனிதாபிமானத்தைக் கருத்திற்கொண்டே தாம் நகருக்குள் நுழையாமல் இருப்பதாக பிரிட்டிஷ் படைகளின் தளபதி கூறினார்.

(ம)




## தொலைக்காட்சி நிலையம் மீது ஈராக்கில் ஏவுகணை தாக்கு!

கட்டார்,மார்ச்27

ஈராக்கின் தொலைக்காட்சி நிலையத்தின் மீதும் தொலைத் தொடர்புக் கட்டுப்பாட்டு நிலையத்தின் மீதும அமெரிக்கப் படைகள் நேற்றுக் கடும தாக்குதல்களை நடத்தின. இதனால் சிறிது நேரம் அவற்றின் சேவைகள் பாதிப்படைந்தன என்று கட்டாரில் உள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏவுகணைகள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று பக்தாத்தில் 40 வரையிலான பெரும் வெடி ஓசைகள் கேட்டதாகவும் அவற்றில் ஒன்று ஈராக்கிய தொலைக்காட்சி நிலையம் மீதான தாக்குதலினால் ஏற்பட்டதாக இருக்கலாம் என்றும் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதல் மூலம் ஈராக்கிய அரசின் கட்டளையிடும் ஆற்றலைத் தாம் குறைத்துவிட்டதாக அமெரிக்க இராணுவம் கூறுகின்றது.

ஈராக் தொடர்ந்தும் தனது நாட்டை ஒரே கட்டளையின் கீழ் வைத்திருப்பதைக் குழப்புவதையும் ஈராக்கின் பிரசார நடவடிக்கைகளை முறியடிப்பதையும் நோக்கமாகக் கொண்டே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட நேரத்தில் தொலைக்காட்சி நிலையம் தனது ஒளிபரப்பை சிறிது நேரம் நிறுத்தி வைத்திருந்தது. ஆனால், சிறிது நேரத்தின் பின்னர் அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

செய்மதி ஊடான ஒளி,ஒலி பரப்புச் சேவைகள் குண்டுத் தாக்குதலின் போது நிறுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர் அவை மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

(ம)

## தவறுதலாக நடக்கும் திடீர்த் தாக்குதல்கள்

குவைத் சிற்றி,மார்ச் 27

ஈராக் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் குழப்பமான தகவல் தொடர்புகளால் அடிக்கடி தமக்கிடையில் தாக்குதல்களை நடத்திக் கொள்கின்றன.

பஸ்ராவைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்திவரும் பிரிட்டிஷ் டாங்கிகளில் ஒன்று திடீரென தமது படைப்பிரிவின் டாங்கி ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியது. தாக்குதலுக்கு இலக்கான டாங்கி வெடித்துச் சிதறியது. அதிலிருந்த இரு பிரிட்டிஷ் வீரர்கள் கொல்லப்பட்டனர். ஏனைய இரு வீரர்கள் படுகாயமடைந்தனர்.

லண்டனில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் இந்தத் தகவலை உறுதிசெய்தார். அது தவறுதலாக இடம்பெற்றதொரு தாக்குதல் என்றார்.

### உலக அரங்கில்

அதேபோன்று -

ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதல் நடத்துவதற்காக பஸ்ரா நகரின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த 'பேட்ரியாட்' ஏவுகணை மீது அமெரிக்காவின் எவ்-16 போர் விமானம் திடீர்த் தாக்குதல் நடத்தியது.

முதலில் 'பேட்ரியாட்' ஏவுகணை தவறுதலாக 'எவ்-16' விமானத்தைக் குறிவைத்தது. இதனை ராடரில் அவதானித்த விமானி உடனடியாக ஏவுகணை மீது குண்டுத் தாக்குதல் நடத்தினார். இதனால் ஏவுகணை சிதறியதுடன் பல அமெரிக்க வீரர்கள் காயமடைந்தனர்.

(ம)



ஈராக் மீதான அமெரிக்காவின் போருக்கு பிலிப்பைன்ஸ் ஆதரவு தெரிவித்து வருகின்றது. இதைக் கண்டித்து அங்குள்ள விமான நிலையங்களைத் தகர்க்கப்போவதாக மிரட்டல்கள் வந்துள்ளன. இதனால், விமான நிலையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நினோனி அக்கினோ விமான நிலையத்துக்கு வந்த இந்தோனேஷிய அதிபர் குளோரியா அரோயாவையும் இந்தச் சோதனைகள் விட்டுவைக்கவில்லை. விமான நிலைய பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஜனாதிபதியையும் துருவித் துருவிச் சோதனையிடுகிறார்.

## அமெ. இராணுவத்துடன் தொடர்பை துண்டித்தது வடகொரியா

சியோல்,மார்ச்27

வடகொரியா தனது அணுஉலைகளை மீண்டும் திறந்ததை அடுத்து கொரியக் குடாவில் பதற்றம் பரவியதால் அங்கு தமது ஆயுத பலத்தையும் படைபலத்தையும் அமெரிக்காவும் தென்கொரியாவும் அதிகரித்து வருகின்றன. இரு நாடுகளும் இணைந்து போர்ப் பயிற்சிகளையும் மேற்கொண்டுள்ளன. இதற்கு ஆட்சேபம் தெரிவித்து வடகொரியா, அமெரிக்கப் படையினருடன் இருந்த வழமையான இராணுவத் தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக் கொண்டுள்ளது.

தமது அதிகாரிகளுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில்

(12 பக்கம் பார்க்க)

## அமெ. விமானம் கொலம்பியாவில் விபத்துக்குள்ளானது

பொகோட்டா,மார்ச்27

அமெரிக்க அரசின் சிறிய விமானம் ஒன்று 3 அமெரிக்கர்களுடன் கொலம்பியாவில் விபத்துள்குள்ளாகி உள்ளது.

விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் அதனைத் தேடும் பணியில் கொலம்பியப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பகுதி தீவிரவாதிகள் நடமாடும் பிரதேசம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து, 3 அமெரிக்கர்களும் அனேகமாக உயிரிழந்திருப்பர் என்றே கருதப்படுகின்றது. எனினும், அவர்கள் பற்றிய முடிவு நேற்று மாலைவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

(ம)

# இதோ இன்று முதல் யாழ் மக்களுக்கு சன்குவிக் பழரசம்

பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப
தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.




sunquick அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

உதயன்

# அவநம்பிக்கை தரும் நடவடிக்கை

யாழ்.நகரில் கோட்டை மற்றும் முற்றவெளி பகுதிகளை உள்ளடக்கி கரையோரப் பகுதிவரையான பெரும் பிரதேசத்தில் பெரிய இராணுவத்தளம் ஒன்றை நிறுவ படையினர் முஸ்தீபு செய்து வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக - நகரில் இயல்பு நிலை திரும்புவதற்கு இடைஞ்சலாக - இருக்கும் ஒரு பெரிய படைமுகாமை அங்கிருந்து அகற்றி, அப்படியே அதனை நகரின் இன்னொரு பகுதியில் - நகரின் விரிவாக்கத்துக்கு இடையூறாக அமையக் கூடிய பிரதேசத்தில் - நிறுவும் முயற்சி இது. இந்தத் திட்டத்துக்கு யாழ். மாவட்ட பொது அமைப்புகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

நகரின் பெரும் பிரதேசத்தை இராணுவ வலயமாக மாற்றுகின்ற இந்தத் திட்டத்தை கண்டித்தும் ஆட்சேபித்தும் பல நடவடிக்கைகளை எடுக்க பொது அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் இராணுவத்தினரை விலக்குவது தொடர்பான விடயத்தில் அரசு - புலிகள் இடையில் இன்னமும் ஓர் இணக்கம் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வேறு பல பகுதிகளிலும் பொதுமக்களின் வாழ்விடங்கள், தொழில் நிலங்கள், காணிகள், கட்டடங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து விலகி பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பூரணமாக ஒத்துழைக்க படைத்தரப்பு மறுத்துவருகிறது.

இது போர்நிறுத்த உடன்படிக்கையையும் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளையும் மீறிய செயல் என்பதை புலிகள் தொடர்ந்து தெளிவுபடுத்தி வருகின்றனர். ஆனால், அரசுத் தரப்போ இது விடயத்தில் தற்துணிச்சலான நடவடிக்கையை எடுக்கமுடியாது அழுத்தங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறது.

சமாதான முயற்சிகளுக்கு மிக அத்தியாவசியமான - அடிப்படையான - மக்களின் இயல்பு நிலை ஏற்படுவதற்கு தடையாக - முட்டுக்கட்டையாக விளங்கும் இந்த விடயம் இன்னமும் கூட சர்ச்சைக்குரிய ஒரு விவகாரமாகவே இருந்து வருகிறது.

நாட்டுக்குவெளியே நல்லபடி நடந்துமுடிந்திருக்கின்ற ஆறு சுற்றுப்பேச்சுகளில் இந்த விவகாரம் திரும்பத் திரும்ப பேசப்பட்டிருக்கிறது. இதில் தமது நிலைப்பாட்டை புலிகள் தரப்பினர் தெட்டத் தெளிவாக விளக்கி வந்துள்ளனர்.

கடைசியாக ஜப்பானில் நடைபெற்ற பேச்சுகளில் கூட புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இந்த விவகாரத்தில் தமது தெளிவான முடிவை அரசுத் தரப்புக் குழுவினருக்கு விளக்கியிருந்தார்.

ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கு அரசுத் துருப்புகள் பின்னடித்ததால்தான் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் உள்ள பிரதேசங்களிலிருந்தாவது வெளியேறுங்கள் என்று நாம் வலியுறுத்துகிறோம். அதற்கு அவர்கள் இணங்கியிருந்தாலும் போவதற்கு இடமில்லை எனத் தெரிவித்து தடைபோடும் யோசனைகளை முன் வைக்கிறார்கள் - என்று புலிகளின் மதியுரைஞர் குறிப்பிட்டிருந்தார்.

'குடாநாட்டில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலங்கள்' என்ற வரையறைக்குள் பொதுமக்கள் குடியிருக்காத காணிகளை, பொதுமக்கள் பயன்படுத்தாத பொதுக் கட்டடங்கள், மைதானங்கள், பொழுது போக்கு இடங்களை கையகப்படுத்தி அங்கு புதிதாக முகாம்களை நிறுவலாம் என்று இராணுவத் தரப்பு முன்வைத்த யோசனையை புலிகள் அடியோடு நிராகரித்து விட்டனர்.

'உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே பயன்படுத்தப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகளை புதிதாக படை முகாம்களை அமைப்பதற்கு பயன்படுத்துவது என்ற இராணுவத்தின் யோசனையை நாங்கள் முற்றாக நிராகரித்துள்ளோம். அவை எமது மக்களுக்குச் சொந்தமான காணிகள். படையினர் ஏற்கனவே தங்கியிருந்த வீடுகளில் இருந்து நகர்ந்து அருகே அடுத்துள்ள வீடுகளில் - காணிகளில் - நிலை கொள்வதில் அர்த்தமில்லை. அதை நாங்களும் அனுமதிக்கமாட்டோம்; எமது மக்களும் அனுமதிக்கமாட்டார்கள் என்று புலிகள் தரப்பு தெளிவாகக் கூறிவிட்டது.

இதற்குப்பிறகும் யாழ்.நகரின் மையப் பகுதியில் - நினைவிடங்கள், பூங்கா, நகர நிர்வாக அலுவலக காணி, விளையாட்டு மைதானம் என்பன அமைந்திருக்கின்ற நிலத்தை அரசு அனுமதி பெற்று கபளீகரம் செய்து, அங்கு முகாம் அமைக்க முயற்சிப்பதும் -

இந்தப் பகுதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளைத் தடுத்து நிறுத்திவிட்டு படைத்தளத்தை நிறுவுவதற்கு முனைப்புடன் நிற்பதும் பொது மக்கள் மத்தியில் ஐயங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இது விடயத்தில் புலிகள் தரப்பு நிலைப்பாட்டை - முடிவை - கருத்தில் - கவனத்தில் - எடுக்காமல் தன்பாட்டில் செயலில் இறங்குவதற்கு இராணுவத்தை அரசு அனுமதித்திருப்பது அவநம்பிக்கைக்கே இடமளித்திருக்கிறது.

# ஏப்ரல் முதல் ஏ-9 வீதி 7 நாள்களும் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்27

எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஏ-9 வீதியூடான போக்குவரத்து வாரத்தில் ஏழு தினங்களும் இடம்பெறவுள்ளது. தற்போது ஞாயிறு தவிர்ந்த ஏனைய ஆறு தினங்கள் மட்டுமே போக்குவரத்து இடம்பெற்றுவருகின்றது.

வாரத்தில் ஏழு நாள்களும் 24 மணி நேரமும் வீதியை திறந்து வைக்க அனுமதிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரி வந்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர், படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

வாரத்தில் ஏழு நாள்களும் பகலில் தற்போது நடைமுறையில் உள்ள நேர ஒழுங்கின்படி வீதியைத் திறப்பதற்கு படைத்தரப்பு இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வாரத்தில் ஏழு நாள்களும் (ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்கள் உட்பட) போக்குவரத்துக்கு பாதையைத் திறப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

(ஐ-3)

## மாதர் மான்மியம்

### ஆரைத்தான் நம்புவது

காலையில் நல்லூர் நண்ணி
கண்ணீர் சொரிந்து நிற்பாள்
மாலையில் துர்க்கை அம்மனுக்கு
மலர்மாலை கட்டிச் செல்வாள்
சோலையில் பூப்பறித்து நாளும்
சொக்கனுக்கு இட்டே உண்பாள்
வேலைக்குப் போகு முன்னர்
வித்தகி வேதக்கோயில் சென்று
நாலைந்து மெழுகேற்றி விட்டு
நாளும் முளங்காலில் நிற்பாள்
நிலையாக ஒரு தெய்வத்தை
நம்பினால் பலனில்லை என்பாள்
ஆலையில் பஞ்சைப் போல
அலைந்தென்ன கண்டீர் மிச்சம்.

- விகடகவி.

போரின்போது அமைக்கப்பட்ட

# காவலரணங்களை அகற்றாததால் மீள்குடியமர்வுப் பணியில் தாமதம்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்27

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட இராணுவத்தினரின் பதுங்குகுழிகள் மற்றும் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படாமையால் மக்களின் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

தட்டுவன்கொட்டி, ஆனையிறவு, பள்ளிக்குடா ஆகிய பகுதிகளில் முன்னர் படையினரால் அமைக்கப்பட்ட காவலரண்கள் பலவும் இன்னமும் அகற்றப்படவில்லை. அப்பகுதிகளில் உள்ள கண்ணிவெடிகளும் அகற்றப்படவில்லை. அங்குள்ள சிறு வீதிகள் புனரமைக்கப்படாமல் பற்றைக் காடுகளாக உள்ளன.

இந்நிலையில் அந்தப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்த முடியாதுள்ளது. இதன் காரணமாக அந்த மக்கள் இடம்பெயர்ந்த இடங்களிலேயே தொடர்ந்து தங்கவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளனர் - இப்படி அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

மீளக்குடியமர்ந்த இரண்டாயிரத்து 88 குடும்பங்களுக்கு மீள குடியமர்வுக் கொடுப்பனவாக 25ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது எனறும் - மேலும் 2ஆயிரம் பேருக்கு கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது என்றும் - அவர் தெரிவித்தார். (ஒ-3)

# நலன்புரி நிலையங்களில் 21 ஆயிரம் குடும்பங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்27

யுத்தசூழ்நிலையின் காரணமாகக் குடாநாட்டில் இடம்பெயர்ந்த 21 ஆயிரத்து 232 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 181 பேர் நலன்புரி நிலையங்களில் தொடர்ந்து வாழ்ந்து வருவதாகச் செயலகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களே அதிக அளவில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக வருமாறு:-

☆ நெடுந்தீவு - 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர்.
☆ வேலணை - 24 குடும்பங்களைச் சேர்ந்த 94 பேர்.
☆ யாழ்ப்பாணம் - ஆயிரத்து 281 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 782 பேர்.
☆ நல்லூர் - 3 ஆயிரத்து 842 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 999 பேர்.
☆ சண்டிலிப்பாய் - 2 ஆயிரத்து 292 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 152 பேர்.
☆ சங்கானை - ஆயிரத்து 643 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 941 பேர்.
☆ உடுவில் - 3 ஆயிரத்து 78 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 636 பேர்.
☆ தெல்லிப்பழை - ஆயிரத்து 172 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 344 பேர்.
☆ கோப்பாய் - ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 264 பேர்.
☆ கரவெட்டி - 506 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 369 பேர்.
☆ பருத்தித்துறை - 2 ஆயிரத்து 61 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 555 பேர்.
☆ மருதங்கேணி - 3 ஆயிரத்து 537 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 24 பேர்.

ஊர்காவற்றுறை மற்றும் தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் நலன்புரிநிலையங்களில் தங்கியிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# மந்திகை வைத்தியசாலைக்கு 11 மருத்துவர்கள் நியமனம்

## விரைவில் பொறுப்பேற்பார்கள்

கரவெட்டி,மார்ச்27

விசேடபயிற்சி பெற்ற பதினொரு மருத்துவர்கள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட உள்ளனர்.

பல்நாட்டு வைத்திய நிபுணர்களால் 3 மாத கால விசேட பயிற்சியளிக்கப்பட்ட 11 பொதுவைத்தியர்கள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வரவுள்ளதாக யாழ். சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் திருமதி உமாசிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இவர்கள் பொதுவைத்திய சிகிச்சைகளை வழங்க உள்ளதாகவும் - இவர்கள் பொறுப்பேற்ற பின்னர் வடமராட்சிப் பகுதியில் நோயாளர்களின் மருத்துவ வசதிகள் மேம்படும் என்றும் -

மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (ஓ-70)

# இந்துமாநாட்டு கண்காட்சிக்கு பொருள் தந்துதவ கோரிக்கை

கொழும்பு,மார்ச்27

இந்துகலாசார அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிமுதல் 5ஆம் திகதிவரை கொழும்பில் நடத்தப்படவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டில் இந்துநாகரிகம் தொடர்பான கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கல்யாண மண்டபத்தில் இக்கண்காட்சி இடம்பெறும்.

இக்கண்காட்சியில் இந்துசமயம் இந்துநாகரிகம் ஆகியவற்றில் சிறப்பான விளக்கத்தக்க நூல்கள், ஏட்டுச் சுவடிகள், ஓவியங்கள், சிற்பங்கள், தொல்பொருள்கள், புகைப்படங்கள் ஆகியன காட்சிக்கு வைக்கப்படவிருக்கின்றன என்றும் -

இத்தகைய பொருள்களை வைத்திருப்பவர்கள் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கவிரும்பினால் மாநாட்டின் செயலாளர் நாயகத்துடன் தொடர்புகொள்ளும்படியும் - கேட்கப்பட்டுள்ளனர்.

காட்சிக்கு வைக்கப்படும் பொருள்கள், அப்பொருள்களின் உரிமையாளர்களின் பெயர், விவரத்துடன் காட்சிப்படுத்தப்படுவதுடன் கவனமாகப் பேணப்பட்டு மீண்டும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும் என்று மாநாட்டுச் செயலாளர் நாயகம் பேராசிரியர் சி.பத்மநாதன் தெரிவித்தார்.

(ஒ-3)

### நாளை

பங்குனி 14
வெள்ளிக்கிழமை
(28.03.2003)
திதி: ஏகாதசி
முற்பகல் 9.43 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
பிற்பகல் 5.17 வரை.
சுபநேரம் : 6.14 - 7.44
ராகுகாலம் : 10.44 - 12.14
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உங்கள் எதிரிக்கு துரோகம் இழைப்பவனை நண்பனாக கருதாதீர்கள். நாளை அவன் உங்களுக்கும் துரோகம் இழைப்பான்.

# சண்டிலிப்பாய் செயலகத்தில் வாழ்க்கைக் கல்விப் பயிற்சி

## பங்கேற்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

நவாலி,மார்ச்27

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்தியாவிலிருந்து வந்துள்ள ஸ்ரீரவிசங்கர் என்பவரின் மேற்பார்வையில் இவ்வகுப்புகள் நடத்தப்பட உள்ளதாகவும - இப்பயிற்சியினால் நல்ல நோயற்ற சுகவாழ்வை தரவும், நீடித்த இளமையை பெறவும், ஊசலாடும் மனம் நிகழ்காலத்தில் நிலைக்கவும், சமூதாயத்தில் குடும்பத்தில் நல்ல உறவை மேம்படுத்த உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் 18வயதுக்கு மேற்பட்ட - கர்ப்பிணிப் பெண்கள் தவிர்ந்த - ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம். இப்பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிவரை தினமும் காலை 9மணி முதல் பகல் 11மணி வரையும் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பெயர், விவரங்களை தங்கள் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் மூலமாகவோ அல்லது சனசமூக நிலையம், அறநெறிப் பாடசாலை, மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் மூலமாகவோ சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-100)

# உரும்பிராய் ஒடையம்பதி கற்பகவிநாயகர் மஹாகும்பாபிஷேக விழா மலர்

## 27.03.2003 – வியாழக்கிழமை

### பிரதம சிவாச்சாரியாரின் ஆசீர்வாதம்

ஈழமணித் திருநாட்டின் வரலாற்றுச் சிறப்பும் தொன்றுதொட்ட மரபுப் பெருமைகளையும் ஒருங்கே பெற்றுள்ள திருத்தலங்களில் ஒன்றாக இன்றும் விளங்கும் ஆலயங்களுள் உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகப் பெருமானின் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் தொன்றுதொட்டே நித்திய, நைமித்திய பூஜைகள், வழிபாடுகள், கிரியைகள், அபிஷேகங்கள், மஹோற்சவங்கள் போன்றவற்றைக் குறைவின்றி நிறைவேற்றிய பெருமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் விநாயகப் பெருமானின் திருவருளோடு நித்திய, நைமித்திய பூஜைகள் மற்றும் அபிஷேகங்கள், மஹோற்சவங்கள் போன்றவற்றை விநாயகப்பெருமானின் தொண்டாக எண்ணிக் கருமமாற்றி வருகிறேன். விநாயகப் பெருமான் திருவருளோடு மீண்டும் புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று இன்று 27-03-2003 மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். இந்த மஹாகும்பாபிஷேக நாளில் இவ்வாலய பரிபாலனசபையினர், இந்து இளைஞர் சபையினர், அடியார்கள், சைவப்பெருமக்கள் எல்லோரும் சகல செல்வங்களும் பெற்று திருவருளோடு வாழவேண்டும் என்று விநாயகப்பெருமான் திருவடிகளை நினைத்து ஆசீர்வதிக்கின்றேன்.

**சிவப்பிரம்மஸ்ரீ இரங்க - வரதராஜக் குருக்கள்.**

### பழம்பெருமை வாய்ந்த ஆலயம்

உரும்பிராய்ப் பகுதியில் பழம் பெருமைவாய்ந்த ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம் 1958ஆம் ஆண்டுமுதல் தர்மபரிபாலன சபையின் நிர்வாகிகளால் சுண்ணாம்புக் கட்டடமாக இருந்த பெரும்பகுதிகள் சீர்திருத்தம் செய்யப்பெற்று, புதிய பரிவாரமூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பெற்று, தேர்க் கொட்டகை அமைத்து, முழுமையான செய்கைத் தேர் அமைத்து, சுற்றுப்பிரகாரம் முழுமையும், ஓட்டினாலான கொட்டகையும் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற்றதை நான் பாடசாலை மாணவனாக இருக்கும்போது கண்டேன். படிப்படியாக காலத்துக்காலம் நல்ல பரிபாலனசபையும் தொண்டர்சபையும் எந்த நாட்டுக் கஷ்டம் வந்தபோதும் திருப்பணிகளும், இராஜகோபுர வேலை, கும்பாபிஷேகம் எந்த உபயங்களும் சிறப்பாக நடைபெற கற்பக விநாயகர் அருள்பாலித்து வந்தார். குறிப்பாக லண்டன் போக என்னும் தொண்டர்சபை உறுப்பினர் அடுத்த திருவிழாவிற்கு லண்டனில் இருந்தே பொருள் உதவியை அனுப்புவார்கள். தற்போது அநேக உலக நாடுகளில் எம்மவர் வாழ்வதால் எல்லோருடைய பெரும் பொருள் உதவியும், தற்போதைய பரிபாலனசபை தலைவர் திரு. இ.நடராஜா அவர்களின் முழுமையான கண்காணிப்பும் தெய்வ பக்தியின் காரணமாகவும் இன்று எம் கண்முன் காட்சியளிக்கும் கற்பக விநாயகர் அழகு மிளிர் மணிமண்டபம், இரண்டாவது மணிக் கோபுரம், மாபிள் பதித்த நிலவேலைப்பாடு போன்ற இன்னோரன்ன சிறப்பு மிளிர் தோற்றம், பஞ்சமுகப் பிள்ளையார், எழுந்தருளி விநாயகர், மகாலட்சுமி போன்ற தெய்வங்களின் கோயில்களும் சேர இன்று (27.03.2003) வியாழன் காலை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமையையொட்டி இக்கைங்கரியம் நிறைவேற மனப்பூர்வமாக செயற்படுங்கள் அனுப்புகின்றோம் என்ற லண்டன் தொண்டன் உட்பட உபயகாரர் வெளிநாட்டில் வாழ்பவர்கள், இலங்கையின் தென்பகுதிகளில் வாழ்பவர்கள், கிராம மக்கள், யாழ்மக்கள் சகல அடியார்களுக்கும் கற்பக விநாயகர் பெரும் அருளாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**நல்லையா கணேசலிங்கம்**
*வங்கிச்சேவை முகாமையாளர், முன்னாள் செயலாளர், தற்போதைய உப – தலைவர்.*

### ஒடையம்பதியின் அருள் ஊற்று

"ஒடை" என்ற பதம் நீரோடையைக் குறிக்கும். நீரோடையில் எப்பொழுதும் நல்லநீர் சுரந்து கொண்டே இருக்கும். உலகப் புகழ் பெற்ற உரும்பிராயிலும் ஓர் 'ஒடை' சிறப்பு நோக்கி ஒடையம்பதி என்று அழைக்கப்படுகிறது. உரும்பிராய் ஒடையம்பதியில் பிரவாகிக்கின்ற நீர் சாதாரண நீர் அன்று; அருள் நீராகும். திருவருளாகிய நீரை அடியார்கள் நன்கு பருகும்படி அருளுகின்றார் உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர். தேவலோகத்தில் உள்ள கற்பகதரு வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் அளிக்கும் தெய்வத்தன்மை வாய்ந்தது. பூலோகத்திலே வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கின்றார் கற்பக விநாயகர். பூலோக கற்பகதரு அவர். "கற்பக விநாயகர் பொற்பதம் பணிவோர் நற்கதி பெறுவர்" என்ற தொடர் உரும்பிராய் எங்கணும் ஒலிக்கின்ற தொடர். "கருணை என்னும் வெள்ளைதம் பொழி சித்தி வேழம்" என்பார் திருவிளையாடற் புராண ஆசிரியர்.

சைவப்பிள்ளைகள் சைவப்பாடசாலையிலே சைவச்சூழலிற் கற்க வேண்டும் என்ற நோக்கினால் பிரசித்தி வாய்ந்த வண்ணை வைத்தீசுவரன் கோயிலுக்கு அண்மையில் ஒரு சைவப் பாடசாலையை 1848 இல் ஸ்தாபித்தார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள். இலங்கையில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட இச்சைவப் பாடசாலைகளுக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்று

(07ஆம் பக்கம் பார்க்க)

### கற்பகனைத் தொழுது கவலைகள் தீர்ப்போம்

கடந்த 20 வருடங்களாக கற்பக விநாயகரின் கண்டாமணி ஓசையுடன் துயிலெழும் பாக்கியம் பெற்றவர்களில் அடியேனும் ஒருவன். சரியாக அதிகாலை இந்த மணிக்கு ஓங்கார ஒலியினால் இவ்வூர் மக்களைத் துயிலெழுப்பி அவரவர் கடமைகளைச் செய்து, கவலையற வாழ அருள் பாலிப்பவன் ஒடையம்பதியான். இவ்வூரவர் அவனுக்குக் கிள்ளிக்கொடுக்க அவன் அவர்களுக்கு அள்ளிக் கொடுத்ததால் பெற்ற தோற்றமே இவனது ஆலய அழகு மணி மண்டபமும், அழகுக் கோபுரங்களும், மணிக்கூட்டுக் கோபுரமுமாகும்.

ஓய்வுபெற்ற பொறியியலாளர் தெய்வசித்தன் இ.நடராசா அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும் ஆலய பரிபாலனசபையினரின் ஆலய சேவை பாராட்டத்தக்கது. தலைவரது சேவையோ மகத்தானது.

இன்று மஹாகும்பாபிஷேகத்தைக் காணும் பேற்றினைத் தந்த இவனது பேரருட் கருணையை வியந்து வணங்கி எம்மாலான திருப்பணிகளைச் செய்து எம் ஆன்ம ஈடேற்றத்திற்கு உழைப்போமாக.

**கவிமணி க.ஆனந்தராசா (அதிபர்).**



### உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகருடைய பெருஞ்சாந்தி பெருவிழாவான மஹாகும்பாபிஷேகம் இன்று 27.03.2003ஆம் திகதி மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. "மஹா கும்பாபிஷேகம் செய்வதால் கிராமமே தெய்வசந்நிதானம் பெறுகின்றது" என்பது ஆகம வாக்கியம். உரும்பிராய் கிராமமே இந்திரவிழா போன்று கோலாகலமாகத் திகழ்கின்றது. அடியார்களின் மனங்களில் சந்தோஷத்தின் பூரிப்பு, மஹாகும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்கும் ஒவ்வொரு அடியார்களுமே பாக்கியவான்கள். சமாதானத்திற்கான அமைதிக்காலத்தில் இப்புனிதமான மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது பொருத்தமானது.

இவ்வாலயத்தின் முன்னாள் பரிபாலன சபைத்தலைவர் அமரர் சி.இராசரத்தினம் இறைவனடி எய்தியபின் இச்சபையைச் சேர்ந்த திரு.ந.கணேசலிங்கம், திரு.க.தருமலிஙகசூரியன், திரு.ச.ஏகாம்பரநாதன் ஆகியோரின் வற்புறுத்தலினால் அடியேன் சபைத் தலைவராக 01.09.1999 ஆம் திகதி பதவியேற்க நேர்ந்தது. அவ்வாண்டு மழை காலத்தில் மழை நீர் உட்பிரகாரத்தை நிரப்பி நிற்பதை அவதானிக்க முடிந்தது. தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு ஆனி மாத மஹோற்சவத்தின்போது விநாயகப் பெருமானை சுமந்து உட்பிரகாரத்தைச் சுற்றி வந்த அடியார்கள் கூரைகள் பதிவினால் குனிந்து, நிமிர்ந்து கஷ்டப்பட்டதையும் அவதானித்து, இவற்றை 2001 ஆம் வருட திருவிழாவுக்கு முன் நிவர்த்திசெய்ய விநாயகரை மன்றாடி வேண்டிக்கொண்டு, திருவிழா முடிவுற்ற அடுத்த நாளே உட்பிரகார முற்பகுதிகளை முற்றாக அகற்றி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால், சில கிராம மக்களின் சீற்றத்திற்கும், குறைகளுக்கும் ஆளாக நேர்ந்தது. அப்போது உள்ள நாட்டு நிலைமைகளை கவனியாமலும், கையில் நிதி இல்லாமலும் இப்படியான வேலைகளைத் தொடங்கி எப்படி முடிக்க முடியும் என்பதே அவர்களின் வேதனையாக இருந்தது.

எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் அருளும், கிராமத்தில் வசித்த அடியார்கள் எல்லோரும் மனம் உவந்து தங்களால் முடிந்த நிதி உதவிகளை அள்ளி வழங்கினார்கள். அடியார்களின் உதவியினாலும், பரிபாலன சபையினதும் மற்றும் தொண்டர்சபை, இளைஞர்களின் ஒத்துழைப்புடனும் முதலாம் கட்ட வேலைகள் 2001 ஆம் வருட திருவிழாவிற்கு முன் பூர்த்திசெய்யப்பட்டு, மஹோற்சவமும் மிக விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது. அடியார்கள் மிகவும் சந்தோஷமாக விழாக்களில் கலந்து இறைவனின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொண்டனர். குறை கூறியவர்கள் கூட தங்கள் அறியாமைகளை

(07ஆம் பக்கம் பார்க்க)

### நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

உரும்பிராய்ப் பதியில் எழுந்தருளி இருக்கும் கற்பக விநாயகருக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சைவத்தமிழ் மக்கள் நிறைந்து வாழும் பிரதேசம் உரும்பிராய், பல ஆலயங்களைக் கொண்டுள்ளது. விநாயகர் வழிபாட்டைச் சிறப்பாகச் செய்து இங்குள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர். "வேண்டுவார் வேண்டுவதை ஈகின்ற" இறைவன் கற்பக விநாயகராக இந்த ஆலயத்தில் வீற்றிருக்கின்றார்.

நம் சமய வரலாற்றில் விநாயகர் வழிபாடும் மிகவும் புராதனமானதும் தனித்துவமானதும் ஆகும். இதனாலேயே எக்காரியத்துக்கும் விநாயகர் வழிபாடு அமைக்கப்பட்டுள்ளது. விநாயகருக்கு நடைபெறும் அபிஷேகம் ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்றும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் நம் சமயம் போற்றுகின்றது. ஆலய வழிபாடு மனிதனை மனிதனாக்குகின்றது. ஆலய கிரியைகளும் விழாக்களும் மனிதனை மனித நேயத்தோடு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் பெற்றுத்தருகின்றது. இதனை நிலைநிறுத்தும் பொருட்டு நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ அருளுமாறு விநாயகப்பெருமான் திருவடிகளை வாழ்த்துகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

### மனங்குளிர அருள்வாய்!

அரும்பொருளே இங்கானே ஆனந்த உவகைதந்த
ஆனைமா முகவன்னலே!
அடியார்கள் குறைபோக்கும் ஞானமருப் பன்னலே
ஆதிசிவன் வடிவழகனாய்
உரும்பிராய் ஒடையம்பதியிலே வான்மருவும்
ஓங்காரக் கோபுரம்தோய்
ஒளிமணிக் கோயிலில் ஆண்டு சித்திரபானு
உணர்மின மதியில் குருநாள்
பெரும் சாந்திக்குரிய உத் தராடத்தில் அபிஷேகம்
பெருவிழா ஏற்றவரையே!
பிறங்கிடும் புவியெல்லாம் நிலவளம் நீர்வளம்
பெருகுபொருள் செழித்திடும் வளம்
தரும்சுகச் செல்வனம் தந்துநின் தொண்டடியார்
தங்குமனம் குளிர அருள்வாய்!
சைவமொடு செந்தமிழ்க் கலைதந்த பிரணவத்
தற்பர கற்பகநாதனே!

அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் M.A.

### கற்பக விநாயகர் ஆலய வரலாறு

ஈழமணித் திருநாட்டின் சிரமென விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் பெருமையை ஏன், இலங்கையின் பெருமையை உலக சரித்திரத்திற் பதியவைத்த பெருமை உரும்பிராய்க்கு உண்டு. உரும்பிராய் பெற்றெடுத்த பஞ்சலிங்கங்களில் ஒருவரான திரு.செல்லப்பா நாகலிங்கம் அவர்கள் இலங்கையின் பதில் தேசாதிபதியாக இருந்த பெருமைக்குரியவர்.

கற்பக விநாயகர் திருக்கோயில் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து 7 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இவ்வாலயம் அமைந்திருக்கும் பகுதியின் குறிச்சிக்குப் பெயர் "ஒடையம்பதி" இதனால் இங்கு எழுந்தருளியுள்ள கற்பகவிநாயகர் ஒடையம்பதி கற்பக விநாயகர் என்று பெயர் தாங்குகின்றார்.

மக்களின் நித்திய வாழ்க்கையுடன் ஒன்றிணைந்துவிட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கி முதலியன கிழக்குத் திசையிலும், வடபால் திருநந்தவனமும், தென்மேற்கில் காளி அம்மன் திருவாலயமும், மேற்கில் சைவத் தமிழ் வித்தியாலயமும், தெற்கில் அந்தணர் வாசஸ்தலங்களும், ஆலயமுகப்பில் திருத்தேர் மண்டபமும், ஆலயச் சூழலைச் சிவமயமாகவே கொண்டுள்ளது தனிச்சிறப்பு என்றே கூறிவிடலாம்.

திருக்கோயிலில் புகுந்துவிட்டால் ஆண், பெண் இருபாலாரும் தலையிலே மும்முறை குட்டி தோப்புக்கரணம் போட்டு வீழ்ந்து முறையே அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் திருக்காட்சி வெளியில் நிற்பவர்களைக்கூட உள்ளே இழுத்துவிடும். திருமுருகன் சந்நிதி, நடராசர் சந்நிதி, வைரவர் சந்நிதி, சந்தான கோபாலர் சந்நிதி, மகாலட்சுமி சந்நிதி, தெட்சணாமூர்த்தி சந்நிதி இவைகளும் பக்தியை வளர்ப்பனவாயுள்ளன. விநாயகரை மனதில் வேண்டி வழிபாடு செய்தால் அவ்வவருக்கு வேண்டிய வரங்களை நல்கி அருள்புரிவார்.

"நற்கும் சரக்கன்று நண்ணிற் கலைஞானங் கற்குஞ் சரக்கன்று காண" என்பது உமாசிவாச்சாரியார் வாக்கு. இங்கே விநாயகருக்குரிய பிள்ளையார் கதை, திருவெம்பாவைக் காலத்தில் வாதவூர் அடிகளின் புராண படனம், இலட்ச்சார்ச்சனைகள் முதலியன சிறப்புற நடைபெறுகின்றன. ஆனிப் பூரணையைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு முன்னர் பத்துத் திருவிழாக்கள் நடைபெற்றன. இப்பொழுது பதினைந்து திருவிழாக்களாகக் கூட்டப்பட்டுள்ளன. இரு சித்திரத் தேர்கள் உள்ளன. ஒரு தேரில் விநாயகரும், மறு தேரில் முருகன்

(07ஆம் பக்கம் பார்க்க)


சர்மிலா றேடேஸ் அன்ட் ரான்ஸ்போட்
உரும்பிராய்ச் சந்தி.

ஐங்கரன் கொம்மினிக்கேசன்
உரும்பிராய் கிழக்கு.

அம்பிகை அமுதம் பல்பொருள் விற்பனை நிலையம்
(சின்னமணி கடை)
உரும்பிராய் கிழக்கு.

ராஜன் வெல்டிங் தொழிற்சாலை
இரும்புவேலைகள் செய்து கொடுப்பது.
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

மணியம்ஸ் துவிச்சக்கர உதிரிப்பாக விற்பனை நிலையம்
உரும்பிராய்ச் சந்தி.

லலிதா களஞ்சியம்
(அழகு சாதனப் பொருள்கள்)
உரும்பிராய்ச் சந்தி.

குணபாலசிங்கம் ஸ்ரோர்ஸ் பல்பொருள் விற்பனை
உரும்பிராய்ச் சந்தி.

சிவசக்தி பல்பொருள் விற்பனை நிலையம்
உரும்பிராய்ச் சந்தி.

வசந்தன் கிறீம் ஹவுஸ்
உரும்பிராய்ச் சந்தி.

கொத்துரொட்டிக்கு நாட வேண்டிய இடம்:
தரிசன் உணவகம்
உரும்பிராய்ச் சந்தி.

அருஷன் சைவ உணவகம்
பலாலி வீதி,
உரும்பிராய்.

பாலா மில்
பலாலி வீதி,
உரும்பிராய்.

விநாயகர் பல்பொருள் வியாபார நிலையம்
உரும்பிராய் வடக்கு.

கணபதி களஞ்சியம், வெதுப்பகம், அரைக்கும் ஆலை
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
பலாலி வீதி, உரும்பிராய்.

சதா காட்வெயார் ஸ்ரோர்ஸ் & பேக்கரி
உரும்பிராய்ச் சந்தி.

ரவி மில்
உரும்பிராய் வடக்கு.

(15963)

# இரத்தப் பற்றாக்குறையால் உருவாகும் பாண்டுநோய்!

வெண்மைநோய், வெளுப்புநோய் எனக் குறிப்பிடப்படும் பாண்டுநோய்க்கு உடலானது தனது இயற்கை நிறம் மாறி வெளுத்திருப்பதுடன் கண்களையோ அன்றி நகக்கண்களையோ நீக்கிப் பார்க்கின் அவை குருதியின்றி வெளுத்திருப்பதனை அறிகுறியாகக் கொள்ளலாம். பொதுவாகப் பின்வரும் 3 நிலைகளில் குருதியின் வன்மை குறைவடைகின்றது.

அவையாவன:-

★ குருதியின் உற்பத்திப் பற்றாக்குறைவு.



★ அதிகளவு குருதி இழக்கப்படுதல்

★ இருக்கின்ற குருதியின் அமைப்பு, செயற்பாடு, தொழிற்பாடு போன்ற வேறுபாடுகளினால் குருதியின் அத்தாதுவுக்கேயுரித்தான தொழில்களைச் சரிவர நிறைவேற்ற முடியாமை.

குருதியை அளவுகடந்து வெளியாக்கும் பெரும்பாட்டு நோய், குருதியழல் நோய், குருதிக் கழிச்சல் நோய், குருதி வாந்தி, மூளை நோய், வெட்டுப்படுதல் முதலானவற்றால் மிகுதியாகக் குருதி வெளியேறல், நச்சுத் தன்மையுடைய மருந்துகளை உட்கொள்ளல், குருதியின் வன்மையைக் குறைக்கக்கூடிய உப்பு, புளிப்புள்ள பொருள்களை மிகுதியாகக் கொள்ளுதல், சுரம், பேதி, வாந்தி, கீல்வாயு போன்ற நோய்களுக்குட்படுதல், உடலை இளைக்கச் செய்யும் வயிற்றுப்பூநோய் (Hookworm), இளைப்பு நோய், நிணக் கழிச்சல் முதலியவைகளாலும், குருதிப் பெருக்கைக் கொடுக்கக்கூடிய ஈரல் நோய்களாலும் புகையிலை, வெற்றிலைப்பாக்கு, மண், சாம்பல் (During Pregnany & in Childhood) திருநீறு, கற்பூரம் முதலியவைகளை அடிக்கடி உட்கொள்ளுதல் போன்றவற்றால் பாண்டு நோய்க்கு ஆளாக நேரிடலாம்.

பாண்டுநோயை வளிபாண்டு, பித்தப்பாண்டு, கபப்பாண்டு, பிரதோஷப் பாண்டு, விஷப்பாண்டு என 5 வகைகளுள் அடக்கலாம்.

## அறிகுறிகள்

சிறுதூரம் நடக்கினும் கால் ஓய்ந்து போதல், பெருமூச்சு வாங்கல், உணவில் விருப்பமின்மை, வாய்குமட்டல், தலை சுற்றல், கண்இருளல், அடிக்கடி மயக்கமாதல், மார்புதுடித்தல், உடல் இளைத்தல், உடல் வெளுத்தல் ஆகியவை பாண்டுநோய்க்கு குணங் குறிகளாக அமையும்.

உடல் வெளுத்துத் தோல் சுருங்குதல், நகக்கண்கள் தடித்து வெளுத்திருத்தல், நா சிவந்து வெடித்துப் புண்ணாதல், நா வழவழத்தல், நா வெளுத்துக்காணல், தொண்டை கம்மல் ஆகிய குணங்குறிகளையும் இந்நோய் காட்டும்.

இந்நோய் பெண்களுக்கு உண்டாகில் சூதகத்தில் வெளியாகும் குருதி தன்னிறம், எடை, நாள், அளவு என்பன குறைந்து வெளியாகும். சிலருக்கு அளவு கடந்து வெளியாகும். அன்றியும் இந்நோய் நாள்படின் உடலில் குருதியின் அளவு, எடை, நிறம் யாவும் குறைந்து உடல் மஞ்சள் பூத்தது போலாகி மஞ்சள்காமாலை நோயாளியைப் போலாகும்.

நோய் பெருகிய நிலையில் ஆயாசம், இளைப்பு, பெருமூச்சு, கழிச்சல், உணவில் வெறுப்பு, வன்மை இழத்தல், உடல் ஊதல் ஆகிய குறிகுணங்கள் தொடரும்.

## வகைகள்

பாண்டுநோயின் வகை அடிப்படையில் குணங்குறிகள் வருமாறு:

**வளி வெளுப்புநோய்:-** இதில் வயிற்றுவலி, நீர்வேட்கை, பசிமந்தம், குருதி நாளாந்தம் கருப்பாகிப் பரபரத்துக் காணப்படல், உடல் நடுக்கம், உடல் வெளுத்து வீங்கல், வீக்கத்தில் வலியுண்டாதல், மலம் தீய்ந்து கட்டுப்படல், ருசியின்மை, வயிற்றுப்பொருமல் ஆகிய குணங்குறிகளை ஏற்படுத்தும்.

**அழல் வெளுப்பு நோய்:-** இதில் உடல் வெளுத்து மஞ்சள் நிறமாதல், நா, கைகால்கள் வெளுத்தல், கண் பார்வை மங்கல், சிலசமயம் வாய் கசத்தல், நெஞ்சை இறுக்கிப்பிடித்தாற் போல் இருத்தல், மூச்சுமுட்டல், தலை கிறுகிறுத்தல் ஆகியவற்றுடன் புளிப்பேப்பம், வாய்ப்புண், மஞ்சள் நிறக் கழிச்சல் ஆகியன உண்டாகும்.

**ஐய வெளுப்பு நோய்:-** இதில் தோல் வெளுத்தல், நரம்புகள் புடைத்தல், நா உப்பு கரித்தல், மயிர்சிலிர்த்தல், வாந்தி, குரற்கம்மல், தும்மல், கோழை கக்கல், மயக்கம், இடுப்பு நோதல், ஆண்மை குறைதல்,சீறிச் சினத்தல், சோர்வு, தளர்வு உண்டாதலாகிய குணங்குறிகளைக் காட்டும்.

**முக்குற்ற வெளுப்பு நோய்-:** இரைவு, பெருமூச்சு, இளைப்பு, உடல் வன்மை குறைதல், மார்பு துடித்தல், உடல் அழல் கொண்டு சிறுநீர் அடிக்கடி கழித்தல், தும்மல், உடல் ஊதலாகிய வெப்பமும் தியக்கமும் உண்டாகும்.

**நஞ்சு வெளுப்பு நோய்:-** உடலுக்கு ஒவ்வாத பொருள்களை உண்பதால் பிறந்த நஞ்சின் அளவாக உடல் வெளுக்கும், நீர்வேட்கை, சுவையின்மை, வாந்தி, விக்கல், இருமல், பெருமூச்சு, உடல் வீங்கல் ஆகிய குறிகுணங்களைக் கொண்டு நரம்பு புடைத்து, உடல் சூடாகத் தோன்றும்.

**மண்ணுண் வெளுப்பு நோய்:-** இது சிறு குழந்தைகளும், சிறு வயதினரும், கருவுற்ற பெண்களும், மண், சாம்பல், செங்கல், திருநீறு, கற்பூரம் இவற்றின் மீது தனித்து இச்சை கொண்டு அளவு கடந்து உண்பதாலும் பிறக்கும் நோயாகும். உட்கொண்ட பொருள்களுக்கேற்ப வயிறூதல், செமியாமை, வாந்தி, கழிச்சல், சுரம், வயிற்றுப்புழு முதலிய நோய்கள் கண்டு உடல் மெலிந்து குருதி வற்றி, வெளுத்து வீங்கி, மார்பு துடித்தல் முதலிய குணங்குறிகளைக்காட்டும்.

## கைக்கொள்ள வேண்டியவை

நோயின் தொடக்கத்தில் பசியைத் தூண்டக் கூடியதும் உடலின் குருதியைப் பெருக்கக்கூடியதுமான உணவுப் பொருள்களைப் பெரிதும் கையாளல் வேண்டும். அன்றியும் வயிற்றுப் புழுக்கள் வெளியாயின் அகத்திக் கீரையை அடிக்கடி சேர்த்து வருவது நன்று. எளிதில் செமிக்கக் கூடிய உணவாக இருத்தல் வேண்டும்.

கரிசாலை பொன்னாங்காணி, அறுகீரை, சிறுகீரை, மணித்தக்காளி, தூளிக்கீரை போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

**காய்கறிகளில்:-** கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல், அவரைப்பிஞ்சு முதலியன எளிதில் செமிக்கக் கூடியனவாகும்.

தவிர வெள்ளையாட்டுக்கறி, ஆட்டு ஈரல், இரைப்பை போன்றவை உடலுக்கு ஊக்கத்தை தந்து குருதி அளவைபெருக்கும்.

பித்தத்தைப் பெருக்கக் கூடிய ஆகார பானங்களைத் தவிர்த்தல் நன்று.

B12 குறைப்பாட்டினால் ஏற்படும் பாண்டிற்கு, ஆட்டீரல், பால், முட்டை இறைச்சி, குடல் என்பன உண்ணலாம்.

பருப்பு வகைகள், பயறு, உழுந்து, எள்ளு, பனங்கட்டி முளைக்கவிட்ட விதைகள், பேரீந்து, திராட்சை போன்றன உட்கொள்ளலாம். மதுபானம், புகைத்தல் என்பன கூடாது. வீக்கம் பிரதான லட்சணமாகக் காணப்படும் போது உணவில் உப்பைத் தவிர்த்தல் அவசியமாகும். கருவாடு உண்ணக்கூடாது. ★

**டாக்டர் திருமதி**
**தவமலர் சீவரத்தினம்**
*சித்த ஆயுர்வேத வைத்தியசாலை*
**யாழ். மாநகரசபை**



நல்லூர் செங்குந்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் பரமேஸ் வரனின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, அண்மையில் திருநெல்வேலி வடகிழக்கு வாலயம்மன் சனசமூக நிலையத்தில் நினைவஞ்சலி மற்றும் உதவிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தலைமை வகித்து உரையாற்றுவதையும் அருகில் அராலியூர் எஸ். சுந்தரலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் க.சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)

## வீதியைத் திருத்த கோரிக்கை

அராலி,மார்ச்27

அராலி மத்தி செந்தமிழ் சனசமூக நிலைய வீதி கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாத நிலையில் மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே பல தடவைகள் அறிவித்தும் இதுவரையிலும் வீதியைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ஓ-14)

## கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சுகாதார அமைச்சின் மருத்துவ முகாம்

கிளிநொச்சி,மார்ச்27

வன்னிப் பெருநிலப்பரப்பில் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

இருபது வைத்திய நிபுணர்கள் குழுவும் வைத்திய அதிகாரிகள் 20 பேர் கொண்ட குழுவும் இந்த மருத்துவ முகாமில் சிகிச்சை அளிக்கவிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு, மாகாண சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்பட இருக்கும் இந்த முகாமில் சகல நோய்களுக்குமான வைத்திய ஆலோசனைகளும் ஆரம்ப சிகிச்சைகளும் வழங்கப்படவிருக்கின்றன.

ஏ-9 பாதை போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டபின்னர், கிளிநொச்சியில் இவ்வாறான பெரிய சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்த முகாமில் சிகிச்சை பெறவிருக்கும் நோயாளர்களை பிரதேச சுகாதார அதிகாரிகள் தற்போது தெரிவு செய்து வருகின்றனர்.

இந்த முகாமை நடத்துவதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சு.சத்தியமூர்த்தி செய்துவருகிறார். (ம-3)

# உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் மஹாகும்பாபிஷேக விழா மலர்

### ஓடையம்பதியின்.....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயருஞ் சூட்டினார். "கோயில" என்ற சிறப்புக்குரிய சிதம்பர தல வீதியிலும் சைவப்பாடசாலையை நிறுவினார் நாவலர் அவர்கள். தேவாலயத்துக்கு அடுத்தது வித்தியாலயம் என்பது அவர்கள் கருத்து. உரும்பிராயிலும் கருணாநிதியாகிய கற்பகவிநாயகருக்குரிய திருவீதியில் அப்பெருமானுக்கே உரிய புண்ணிய பூமியில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் அமைந்திருப்பதும் தனிச்சிறப்பேயாகும்.

கற்பக விநாயகர் திருமுன்றிலில் வானளாவும் இராஜகோபுரம் நிமிர்ந்து நிற்கிறது. மங்களகரமாக இருமருங்கும் மணிக்கோபுரங்கள், ஆலயத்தின் உள்ளும் புறமும் நவீன வேலைப்பாடுகளுடன்கூடிய திருமண்டபங்கள், தேரோடும் திருவீதி இவ்வாறு புதுப்பொலிவுடன் விளங்கும் கற்பக விநாயகர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயக மூர்த்திக்கு இன்று குடமுழுக்கு விழா; மஹா கும்பாபிஷேகம். குடமுழுக்கு விழாவினைப் பெருஞ்சாந்தி என்றார் நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தர். கற்பக விநாயகரின் மஹா கும்பாபிஷேகத்தை நேரிலே தரிசிப்பவர்கள், செய்தி ஊடகங்கள் வாயிலாகக் காண்பவர்கள், கேட்டறிபவர்கள் எல்லோருமே புண்ணியவான்கள்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்" என்பது உறுதி.

**ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்.**

### கற்பகவிநாயகர் ஆலய...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளி தெய்வானையுடன் வீதி வலம் வருவது சிறந்த காட்சியாக அமைகின்றது.

கோயிலின் அழகிற்கு அழகு தருவன கோபுரங்கள். தூலலிங்கமாகிய கோபுரத்தை வழிபாடு செய்வது கோடி புண்ணியமாகும். எமது ஆலயத்தில் ஐந்து தளங்களைக் கொண்ட 60அடி உயரமான கோபுரம் சித்திர வேலைப்பாடுகளுடன் கம்பீரமாகக் காட்சிதருகின்றன.

இவ்வாலயத்திற்கு பூசகர்களாக உழைத்தவர்கள் சிவஸ்ரீ இ. பரமசாமிக் குருக்கள், கு.வேதக்குட்டிக்குருக்கள் என்று அழைக்கப்படும் பொன்னையாக்குருக்கள், சு.முத்துக்குமார சுவாமிக்குருக்கள், பரமசாமிசர்மா ஆகியோரே இவ்வாலயத்தின் முன்னைய குருக்களாவார்கள். இதன்பின் பாலகுருக்கள், க.மு. ஐயாத்துரைக்குருக்கள் கடமையாற்றியுள்ளார்கள். இப்பொழுது ஸ்ரீரங்கவரதராஜக் குருக்கள் அவர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

இவ்வாலயம் இடப்பெயர்வுக்குப்பின் முன்மணிமண்டபத்தையும், தற்போது உள் ஆலய வீதிகள் எல்லாமே மணிமண்டபமாக காட்சியளிப்பதைக் காணலாம். ஆதிமூலம் திரிதளமாகவும், காளி அம்மன் ஆலயம், வெளி வைரவர் எல்லாமே மணிமண்டபங்களாகக் காட்சிதருகின்றன. இப்பணியில் தன்னை அர்ப்பணித்து அல்லும் பகலும் அயராது உழைத்த எமது தலைவரும் தெய்வ சித்தனுமாகிய இ. நடராசா அவர்களின் சேவையை நாம் பாராட்டாது இருக்க முடியாது. இன்று இடம்பெறும் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகர் அனைத்துச் செல்வங்களையும் கொடுத்து உய்தி பெற அருளும்வண்ணம் விநாயகரின் பாதாரவிந்தங்களைப் பணிவோமாக.

*ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்,*
*உரும்பிராய்.*

**ச.ஏகாம்பரநாதன் J.P.**
**செயலாளர், பரிபாலனசபை.**

### உரும்பிராய் ஓடையம்பதி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்துகொண்டனர்.

இரண்டாம் கட்ட வேலைகள் 2002 ஆம் ஆண்டு ஆடி மாதம் பெரும்பாலும் வெளிநாடுகளில் வாழும் உரும்பிராய் அடியார்களின் உதவிகளுடன் தொடங்கி இப்பொழுது 98% முடிவடைந்துள்ளது. 2003ஆம் ஆண்டு இவ்வாலய மஹாகும்பாபிஷேகம் செய்யப்பட்டு, 12 வருடங்கள் முடிவடைந்தமையால் இப்பொழுது அதனை நடத்த கற்பகப் பிள்ளையார் அருளியமையாலும் பரிபாலன சபையின் ஏகமனதான தீர்மானத்தினாலும் நிறைவேற்றப்பட்டது. இதனை சமயப் பெரியார்களின் ஆசியுடனும், அவர்களால் கணிக்கப்பட்ட நல்ல நாளாகிய இன்று 27.03.2003 இல் நடைபெறுகிறது.

இவ்வாலயத் திருப்பணிக்கு அள்ளி வழங்கிய அடியார்களுக்கும், சரீர உதவி புரிந்தவர்களுக்கும், பொருள்கள் விநியோகித்தவர்களுக்கும், வாகன உதவி புரிந்தவர்களுக்கும், கட்டட வேலைகளில் பங்குபற்றிய சகல தொழிலாளர்களுக்கும் இக்காலத்தில் துன்பங்கள் கொடுத்தவர்களுக்கும் எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகர் அருள் புரிந்து எல்லோரையும் நல்வழிப்படுத்தப் பிரார்த்திக்கின்றேன். அத்தோடு விரைவில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவி மக்கள் பீதி இன்றி, நோய் நொடி இன்றி சகல சௌபாக்கியங்களும் பெற்று சுதந்திரமாக நீடூழி வாழ கற்பக விநாயகரின் பாதாரவிந்தங்களை வணங்குகின்றேன்.

சுபம்.

**திருப்பணி சுரபி, தெய்வ சித்தன்**
**இ.நடராசா**
**தலைவர், ஆலய பரிபாலனசபை.**

# சின்னஞ்சிறு விளம்பரம்


## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வயது 33, பட்டதாரி அரச ஆசிரியைக்கு செவ்வாய்த்தோஷமுள்ள, படித்த, அரச கூட்டுத்தாபன மணமகன் விரும்பத்தக்கது. யாழ். நகரில் வீடும் தகுந்த சீதனமும் வழங்கப்படும். முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1825, C/o உதயன். (15988)

## மணமகள் தேவை

கிறிஸ்தவ, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சவுதியில் Mechnic Supervisor ஆகத் தொழில்புரியும், 31வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். படத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆ.சஞ்சீவன் (வீடியோ சென்ரர் அருகில்), ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529. (15998)

## விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.171, பலாலி வீதி, கந்தர்மடம். (15976)

நல்ல நிலையிலுள்ள பாதணிக் காட்சியறைக்கு உகந்த 3'x5'x8' அளவுடைய அலுமினிய சோக்கேஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தியாகராஜா, 325, பலாலி றோட், திருநெல்வேலி. (15995)

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த கந்தையா யோகரத்தினம் (அழகு) என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியவை 811ஆம் மார்க்க பஸ்ஸினுள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம், சிறி வெற்றிலைக் கடையில் ஒப்படைக்கவும். (சி-27001)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் இன்று (27-03-2003) வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15994)


## சிறுகதைப் போட்டி

யாழ்.சென். றோக்ஸ் இளைய தலைமுறைக் கழகம் சிறுகதை போட்டியை நடத்தவுள்ளது.

"உண்மைக்கு நீதியில்லை" எனும் தலைப்பில் 25வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டிக்கான ஆக்கங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கலாம் என குருநகர் சென்.றோக்ஸ் இளைய தலைமுறைக்கழகம் அறிவித்துள்ளது.(ஒ-51)

## ஊடகவியலாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்27

தமிழ் ஊடகவியலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றினை வெகுஜன தொடர்பியல் மேம்பாட்டு அமைப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் மற்றும் அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் போன்றவை எதிர்காலத்தில் ஏற்படுவதனைத் தடுப்பதற்கு செயற்குழு ஒன்றை அமைப்பதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து தமிழ் ஊடகவியலாளர்களையும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு வெகுஜனத் தொடர்பியல் மேம்பாட்டு அமைப்பின் செயலாளர் ஏ.ஆர். சந்திரகுமார் கேட்டுள்ளார். (ஒ-ரி)


## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். கொடிகாமம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

29.03.2003

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29-03-2003ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். நிகழ்ச்சி நிரலும், இணைப்புக்களும் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முகவரி மாற்றங்களினாலும், ஏனைய காரணங்களினாலும் அழைப்பு கிடைக்காவிடினும் சங்கத்தின் வளர்ச்சி கருதி தவறாது சமுகமளிக்கும்படி கருணை கூர்ந்து வேண்டிக்கொள்கின்றோம்.

வ. ந. வல்லிபுரம்
தலைவர்

சு. சண்முகம்
செயலாளர்

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம். 24-03-2003

(சி-27009)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
09 - 07 - 1931



மறைவு
25 - 02 - 2003

### திருமதி நடராசா பரமேஸ்வரி

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உத்தமியே!
எந்நாளும் உம் நினைவு எங்களை விட்டு அகலாது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

இன்று (27.03.2003) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்: நடராசா.
பிள்ளைகள்: தர்மராணி, புஸ்பராணி, விஜயராணி, விஜயராசா, அப்பன், ராபு, கோபு, வசந்தி, மஞ்சு.

தற்காலிக முகவரி:
மீசாலை வடக்கு,
வேம்பிராய்.


நிரந்தர விலாசம்:
யாழ் வீதி,
பலாலி வடக்கு, பலாலி.

(15996)


# பேரழிவுக்குள்ளாகும் புராதன நகரம்

கிறிஸ்து பிறப்பதற்கு முன் 3 ஆயிரத்து 360ஆம் ஆண்டில் உதயமான பெருமை வாய்ந்தது ஈராக்.

ஜூலை 2002ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி ஈராக்கின் மொத்த மக்கள் தொகை 2 கோடியே 40 லட்சம்.



இதன் பரப்பளவு 4 லட்சத்து 37 ஆயிரத்து 72 சதுர கி.மீ. இதில் சன்னி அரபுகள், சன்னி குர்த்கள், சித்தி அரபுகள் என 3 வகையான முஸ்லிம்களும், கொஞ்சம் கிறஸ்தவர்களும அடங்குவர். இந்த நாட்டின் ஏகோபித்த தலைவராக 1979ஆம் ஆண்டு முதல் ஆட்சி புரிந்து வருபவர் சதாம் ஹுசைன். 250 அரச உறுப்பினர்கள் அடங்கிய பாத் கட்சிதான் அங்கு பிரதானம். சதாம் ஹுசைன் மீது அங்குள்ளவர்கள் பற்று வைத்திருக்கிறார்கள். அதாவது, வாக்குச் சீட்டில் சதாமை ஆதரித்து ரத்தக் கையெழுத்துப் போடும் லட்சக்கணக்கானவர்கள் அங்குள்ளனர்.

ஈராக் நாட்டில் பக்தாத், சமாரா, திக்ரித், மொசுல், பஸ்ரா, அனா, ஹலாப்ஜா, இப்ரி, தகுக், அல்குத் என்பவை பிரதான நகரங்கள். இங்கு டைகர், யூப்ரடீஸ் என 2 ஆறுகள் ஓடுகின்றன. அர் ரசாக் என்றோர் ஏரியும் இருக்கிறது. 100 சதவீத ஈராக்கியர்களில் 57சதவீதம் பேர் படித்தவர்கள், 60 சதவீதம் பேர் அரசாங்கத்தை நம்பி வாழ்பவர்கள். 2001 கணக்குப் படி ஈராக்கியர்களின் சராசரி ஆயுள் காலம் 56. (இன்று அதனை அமெரிக்காதான் நிர்ணயிக்க வேண்டும் என்பது வேறு விடயம்.)

ஈராக்கைச் சுற்றி ஜோர்டான், குவைத், சவூதிஅரேபியா, சிரியா, துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் எல்லையாக அமைந்துள்ளன. ஈராக்கின் அழகே தலைநகர் பக்தாத் நகரம்தான்! சுமார் 50 லட்சம் பேர் வசிக்கும் பக்தாத் நகரம் இன்றைக்கு எவ்வளவோ நவீனமாக மாறிவிட்டது. என்றாலும் பழைய பாரம்பரியம் இன்னமும் அடி பிறளாமல் இருக்கத்தான்செய்கிறது.

காரணம் நாடாளுமன்றக் கட்டடம், சதாம் ஹுசைனின் அரண்மனை, பாத் கட்சித் தலைமை அலுவலகம், இராணுவ அமைச்சகம், ஊடகக் கட்டடங்கள், ஈராக் செய்தி நிறுவனம், விமானப் போக்குவரத்து தலைமை அலுவலகங்கள், இராணுவ விமான தளம், பக்தாத் ரயில் நிலையம், இராணுவ நினைவுச் சின்னங்கள், பழம்பெருமை வாய்ந்த மகுதி, பக்தாத் பல்கலைக்கழகம், சதாம் ஹுசைன் சர்வதேச விமான நிலையம் ஆகியயாவும் பக்தாத்தில்தான் உள்ளன.

உலக அதிசயங்களில் ஒன்றான பபிலோனிய தொங்குதோட்டம் இந்த பக்தாத்துக்கு வெகு அருகேதான் இருக்கிறது. பக்தாத்திலுள்ள அல் - அசிமியா, அப்பாசிக், சிஜோத் ஆகிய மூன்று முக்கிய அரண்மனைகள் புராதன காலத்தில் கலை நுணுக்கங்களுடன் கட்டப்பட்டவையாகும். ஈராக்கின் மிகப் பெரிய எண்ணெய்க் கிணறான அல் - துவாரக் எண்ணெய்க்கிணறு தொழிற்சாலையும்கூட இந்த பக்தாத்தில்தான் அமைந்திருக்கிறது. இத்தனை சிறப்பு மிக்க பக்தாத்தைத்தான் மயான பூமியாக்கிக்கொண்டிருக்கிறது அமெரிக்கா.

# அணியில் சேர்க்காமை குறித்து முரளிதரன் வியப்பு! 'கவுண்ரி' போட்டிகளுக்குச் சென்றுவிடுவேன் என்கிறார்!!

சார்ஜா கிண்ணப் போட்டிகளுக்கான அணியில் தன்னை சேர்க்காமை குறித்து முத்தையா முரளிதரன் வியப்படைந்துள்ளார்.

முரளிதரனுக்கு இடுப்பின் கீழே கால் பகுதியில் ஏற்பட்டிருந்த உபாதை உலகக் கிண்ணப் போட்டிகளின் போது மேலும் அதிகரித்தமையாலேயே அவர் சார்ஜா போட்டிகளுக்கான அணியில் சேர்க்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

ஆனால், இதை முரளிதரன் மறுத்துள்ளார். திங்களன்று தொலைக்காட்சி பேட்டியொன்றில் இது தொடர்பாக முரளி கருத்துத்தெரிவிக்கையில்

என்னால் விளையாட முடியுமா? இல்லையா? என்று ஒருவரும் என்னிடம் கேட்கவில்லை. சார்ஜா போட்டிகளில் விளையாடுவதற்கு பூரண



தகுதியான நிலையில் நான் இருக்கிறேன்.

இலங்கை அணிக்கு நான் தெரிவு செய்யப்படாவிட்டால் இங்கிலாந்தின் லங்காஷயர் அணிக்காக 'கவுண்ரி' போட்டிகளில் விளையாடுவேன்.

- இவ்வாறு முரளிதரன் கூறினார்.

தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள அணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் இதுவரை அங்கீகாரமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி, ஏப்ரல் மாத இறுதியிலிருந்து நியூஸிலாந்துடனான டெஸ்ட் ஆட்டங்களிலும் பங்குபற்றவுள்ளது. இதனால், இறுதி நிமிடத்திலேனும் முரளிதரன் இலங்கை அணியில் சேர்க்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

# இந்தியாவின் தோல்வியால் கலவரம்! துப்பாக்கிச் சூட்டில் அறுவர் காயம்!!

உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணியினரின் மோசமான ஆட்டத்தை கண்டிக்கும் வகையில் கொல்கத்தாவில் ரசிகர்கள் அவர்களது படத்தை கொளுத்தி கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 6பேர் படுகாயம் அடைந்தனர்.

உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்தியா முதலில் பந்து வீசியது. பதட்டத்துடன் காணப்பட்ட இந்திய வீரர்களின பந்து வீச்சை ஆஸ்திரேலிய வீரர்கள சிதறடித்தனர். இதனால், ஆஸ்திரேலியா, 2 விக்கெட் இழப்புக்கு 359 ஓட்டங்களை பெற்றது. இந்தியாவின் துடுப்பாட்டத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம் ரசிகர்களுக்கு கொஞ்சமும் இல்லை. எனினும், டெண்டுல்கர் மீது இருந்த நம்பிக்கையால் ரசிகர்கள் பொறுமையாக இருந்தனர்.

ஆனால்; 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டெண்டுல்கர் பெவிலியன் திரும்பினார். ரசிகர்கள் மனதில் அடங்கிக் கிடந்த உணர்ச்சிகள் பொங்கின. கொல்கத்தா, டெல்லி, மும்பை மற்றும் சென்னை ஆகிய முக்கிய நகரங்களில் ரசிகர்கள் கொதிப்படைந்தனர். வீரர்களுக்கு எதிராக கோஷம் போட்டபடி சென்றனர். கோபம் தீராத கொல்கத்தா ரசிகர்கள், இந்திய அணி வீரர்களின் படங்களை ஒன்றாக குவித்துப் போட்டுத் தீ வைத்துக் கொளுத்தினர். அப்போது தேசிய கொடியையும் கோபத்தில் கொளுத்தி விட்டனர்.

அப்போது அந்த வழியாக ரோந்து சென்ற பொலீஸார் 2 ரசிகர்களை கைது செய்தனர். சிறிது நேரத்தில் நூற்றுக்கணக்கான ரசிகர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும் நோக்கில் பொலீஸ் நிலையம் மீது கல்வீசி தாக்குதல் நடத்தினர். இன்னும் சில ரசிகர்கள் காவலுக்கு நின்ற பொலீஸாரை கண்டபடி தாக்கினர்.

ரசிகர்கள் கலைந்து செல்லும்படி பொலீஸார் பலமுறை முயற்சி செய்தனர். ஆனால், ரசிகர்கள் கேட்கவில்லை. பொலீஸ் வான் மீது கல்வீசி தாக்குதல் நடத்தினர். இதனால், ரசிகர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 3 ரசிகர்கள் காயம் அடைந்தனர். ரசிகர்கள் கல் வீசியதில் 3 பொலீஸாருக்கு காயம் ஏற்பட்டது. தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாக பொலீஸ் உயர் அதிகாரி தெரிவித்தார். (ஒ)

# இறுதியாட்ட முடிவால் 3 இந்தியர் உயிரிழப்பு!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியாவின் தோல்வியைத் தாங்க முடியாமல் இருவர் தற்கொலை செய்து கொண்டனர். மேலும் ஒருவர் அதிர்ச்சியால் காலமானார்.

தமிழகத்தின் சேலம் மாவட்டத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. 48 வயதான ஆறுமுகம், 17 வயது மாணவனான கணேசன் ரவி ஆகியோரே, தற்கொலை செய்து கொண்டவர்களாவர்.

இந்திய அணி தோற்ற அதிர்ச்சியில் தமிழ்நாடு நீலகிரியைச் சேர்ந்த ஒரு ரசிகர் மாரடைப்பால் இறந்துள்ளார். கடலூர் அருகேயுள்ள நடுவட்டம் டி.ஆர். பகுதியில் வசிப்பவர் தங்கதுரை (வயது 40) இவர் கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வமுடையவர். இறுதிப்போட்டியில் இந்தியா தோல்வியடைந்ததை நினைத்து இரவு முழுவதும் மனம்வருந்தி புலம்பியபடி இருந்தாராம். திங்களன்று காலை அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. இதனால், அவர் பரிதாபமாக இறந்தார். (ஒ)

# வன்னி மாணவர்களுக்கு விசேட கணனி வகுப்புகள்

வன்னி மாணவர்களுக்கு கணனி அறிவை மேம்படுத்தும் நோக்குடன், தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில வன்னிப் பிரதேசத்தின் பல இடங்களிலும் கணனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாக அந்த அமைப்பின் பொறுப்பாளர் ராணி மைந்தன் தெரிவித்தார்.

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் அனுசரணையுடன் இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன என்றும்-

இந்த வகுப்புகளில் பங்குபற்றி சுமார் 10ஆயிரம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்றும் - அவர் கூறினார்.

முள்ளியவளையில் கணனி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு, 200 மாணவர்களுக்கு இலவசமாக கணனிப்பயிற்சி வழங்கப்படுவதாகவும் - செட்டிக்குளம் பகுதியில் கணனி நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் - அவர் மேலும் கூறினார். (ஒ-3)

# பாவிகளை மன்னிப்போம்!

இந்த உலகில் பிறந்தவர் யார் தான் பாவம் செய்யவில்லை, யார் தான பாவம்செய்யாமல் இருக்கக் கூடும்? தவக்காலம் ஆன்ம சுத்திசெய்து மன்னிப்பு வேண்டுவதற்கென சிறப் பாகக் கொடுக்கப்பட்ட காலம் எம்மைப் படைத்த இறைவன் நமது பாவங்களை

**தவக்காலச்சிந்தனை -23ஆம் நாள்-**

நன்கறிவார். எனவேதான் நாம் பாவத் தில் தவறிவிழுந்தாலும் நமக்கு உதவியளித்து எம்மைத் தூக்கி விட முன்வருகிறார்.

ஆனால், எமது சமூகத்தில் நடப் பது என்ன? ஒருவர் சமூகத்தின் நல்ல முறைகளுக்கு மாறாக ஒரு முறை தவறிவிட்டால் அல்லது பாவம் செய்தால் அவரை நாம் ஒதுக்கி வைத்துவிடுகின்றோம். அவருடனோ அல்லது அவர் குடும்பத்துடனோ உறவு வைத்துக்கொள்வது எமக் குப் பாவம் என ஒதுங்கி இருந்து விடுகின்றோம். ஆனால், நாம் எவ் வாறு நடக்கின்றோம் என்றில்லாமல் அடுத்தவரது காரியங்களை தீர்ப் புக்குள்ளாக்குகின்றோம். அடுத்தவர் பாவத்தைக் கருத்தில் எடுத்து வாழ் கின்றோம். பாவம் செய்தவர் என்ன சூழலில் அப்பாவத்தினைச் செய்ய நேர்ந்தது என்பது பற்றி சிந்திப்ப தில்லை. அதேவேளை, ஒருவரின் செயலுக்காக இறைவன் வேறு ஒரு வனுக்குத் தீர்ப்பு அளிக்கமாட்டார்.

எனவே, நாம் பாவத்தில் வாழ்வ தும் அதை விட்டுவிடுவதும் எம்மைச் சார்ந்தது. எமது வாழ்வில் நாம் ஒவ் வொருவரும் பாவம் செய்தவர்களை

**ஹா. மேசி**

என்ன மனநிலையுடன் ஏற்றுக்கொள் கின்றோம் என்பதும் - நாம் எந்தவித மான வாழ்வு வாழ்கின்றோம் என்பதும் - முக்கியமானவையாகும். மனிதர் களாகிய நாம் ஒவ்வொருவரும் பல வீனர்கள். பாவம் செய்வது இயற்கை. ஆனால், நாம் செய்த பாவங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். மனம் வருந்த வேண்டும். அத்துடன் பாவம் செய்தவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளவேண்டும்.இதுவரை காலமும் நாம் சமூகத்தின் நன் மதிப்புப் பெறுவதற்காக பாவம் செய்தவர்கள் என ஒதுங்கித்தள்ளியவர்களுடன் உறவை ஏற்படுத்திக்கொள்வோம். ★

## வரணியில் பலருக்கு தாழ் இரத்த அழுத்தம்

தென்மராட்சி,மார்ச்27

வரணிப் பிரதேச மக்களில் பெரும் பாலானோருக்கு தாழ் இரத்த அழுத் தம் உள்ளமை கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச் சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத் தப்பட்ட இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் இந்நோயால் பலர் பீடிக்கப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

சிகிச்சைபெற வந்த சுமார் 175 பேருக்கும் வயது வேறுபாடின்றி - தாழ் இரத்த அழுக்கம் இருந்ததாகவும்- உளவியல் தாக்கமே இந்த நோய் ஏற்படக் காரணமெனவும் - மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கழக செயலாளர் லயன் கா. சற்குணதேவன் கூறினார்.

மேலும் கண் பரிசோதனை மேற் கொண்ட 175 பேரில் எட்டுப் பேருக்கு விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற் பட்டிருந்தமையும் 130 பேருக்கு கண் ணில் பாதிப்பு ஏற்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-117)

## மாணவருக்கு அன்பளிப்பு

அகில இலங்கை இந்துமாமன்றத் தினர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளில் கல்விபயிலும் ஆயிரத்து 372 மாணவர்களுக்கு 7 ஆயிரத்து 550 அப்பியாசக் கொப்பி களை வழங்கியுள்ளனர்.

கடந்த வாரம் நல்லை ஆதீனத் தில் வைத்து அந்தந்தப் பாடசாலை களின் அதிபர்களிடம் அப்பியாசக் கொப பிகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (ஒ-117)

## 3 கிராம அலுவலர் பிரிவுகளில் நிவாரணக் கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக் கள் மீளக்குடியமர்ந்த மேலும் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 257 குடும்பங்களுக்கு உட னடி நிவாரணக் கொடுப்பனவாக ரூபா 25ஆயிரம் வழங்குவதற்கான பதிவுகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மேற்கொள்ளப்பட்டன.

எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசு வில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவின ரும், தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரும் இணைந்து பதிவுகளை மேற்கொண்டனர்.

ஏற்கனவே 23 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 4ஆயிரத்துக்கு மேற்பட்ட மீளக்குடியமர்ந்த குடும்பங் களின் பெயர்கள் பதிவுசெய்யப் பட்டு கட்டம் கட்டமாக கொடுப்பன வுகள் வழங்கப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது. (ஒ-117)

## புற்றுநோய் சிகிச்சை

மகரகம புற்றுநோய் வைத்திய சாலை புற்றுநோய் நிபுணர் திருமதி வாணிபிள்ளை எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க உள்ளார்.

இவ்விரு தினங்களிலும் தெல்லிப் பழையில் இடம்பெறும் சிகிச்சைகளில நோயாளர்கள் கலந்துகொள்ளும்படி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதி காரி கேட்டுள்ளார். (ஐ-3)

## சமுர்த்தி அலுவலருக்கு மார்ச் 30 ஆம் திகதி போட்டிப்பரீட்சை

பட்டப்படிப்பில் சித்தியடைந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர்களை சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு தரம் உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு லும்பினி வித்தி யாலயத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையில் வறுமையொழிப்பும் சமுர்த்தி இயக்கத்தின் தொழிற் பாடுகளும், கணக்கீட்டு நிறுவனமும் நிர்வாக நடவடிக்கைகளும், பொது விவேகமும் பொது அறிவும் ஆகிய பாடங்களில் பரீட்சை இடம்பெறும்

இப்பரீட்சைக்கான அனுமதி அட் டைகள் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்தி களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(ஒ-76)

## தீவுப்பகுதித் தபாலகங்களில் உபதபாலதிபர் வெற்றிடங்கள்

தீவுப்பகுதித் தபாலகங்களுக்கு நீண்டகாலமாக உப தபாலதிபர்கள் நியமனம் வழங்கப்படாமையால் சாதா ரணதர ஊழியர்களே அக்கடமையை ஆற்ற வேண்டிய நிலைமை ஏற்பட் டுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரி வித்தன.

அனலைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள உபதபா லகங்களில் மிக நீண்ட காலமாகவே உப தபாலதிபர்கள் நியமனம் வழங் கப்படவில்லை. இதனால், சாதாரண தர உத்தியோகத்தர்களே இக்கடமை களை ஆற்றி வருகின்றனர். இது தொடர்பாக யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கத்திடம கேட்ட போது அரச நியமனங்கள் மட டுப்படுத்தப்பட்டுள்ளமையே இதற்குப் பிரதான காரணம் எனத் தெரிவித்தார்.

குறிப்பாக யாழ் மாவட்டத்தில் தரம ஒன்றிற்கு 24 உதவித் தபாலதிபர்களும், தரம் இரண்டிற்கு 84 உதவித தபா லதிபர்களும் தேவையாக உள்ளனர்.

இந்தத் தேவை நிறைவேற்றப் படும் பட்சத்தில் தீவுப் பகுதிகளுக் கான உப தபாலதிபர் நியமனங் களையும் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-12)



## சாயி சிந்தனை

### எல்லாம் இறைமயம்

ஒளி மிகுந்த விளக்கைக் காண நமக்கு வேறு தப ஒளி எதுவும் தேவையில்லை. அதைப்போலவே ஒளிவீசும் ஆத்ம ஞானத்தை அறிந்து கொள்ளத் தனியாக வேறு எதுவும் வேண்டாம். ஒவ்வொரு மனிதனிடமும் இந்த ஆத்ம தத்துவம் நிறைந்திருக்கிறது. ஆனால், இந்தப் பெருமை மிக்க ஆத்ம ஞானத்தை உணர முடியாததால்தான் மனிதன் வேறு வகை யான அறிவைத்தேடிப் போகின்றான். படைப்பில் காணப்படும் மாறுபாடு கள் எல்லாம் நம் பார்வையில்தான் இருக்கின்றன. நிரந்தரமற்ற எல்லாம் அடிக்கடி மாறும். எல்லாம் நிரந்தரமான தெய்வத்துவத்தைச் சார்ந்தே இருக்கின்றன. சிருஷ்டி முழுவதும் ஒரு நாடக அரங்கம். இதில் நடிப்பதும் இயக்குவதும் இறைவனே! எல்லா உருவங்களையும் வேடந்தாங்கி நடிப பது அவரே! நீங்கள் காணும் உருவங்கள் எல்லாம் இறைவனின் வெவ் வேறு உருவங்களே எனப் புரிந்துகொள்ளுங்கள். உங்களை யாராவது தூஷித்தாலோ அன்றி பாராட்டினாலோ, கடவுளே அதைச் செய்கிறார் என்று உணருங்கள்! இந்த உலகில் நடக்கும் நல்ல, தீய செயல்கள் அனைத்தும் அவரால்தான் ஏற்படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து கொள்ள இயலாததால் மனிதன் தன்னை யாரோ தூற்றுகிறார்கள் என்று கோபப்படுகிறான். இல்லையென்றால் போற்றுகிறார்கள் என ஆனந்தப்படு கிறான். இல்லை! இல்லை! இந்த வேஷங்களை எல்லாம் பார்த்து நீங்கள மோசம் போகக்கூடாது! எல்லா இயக்கமும் இறைவனின் செயற்பாடே! என்கிற உயர்ந்த சத்தியத்தை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும்!

(ஆதாரம்: சனாதனசாரதி)


## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் நூதன பஞ்சதள சுந்தர இராஜகோபுர சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ



இன்று (27.03.2003) வியாழன் மஹாகும்பாபிஷேகத்தை, பனையோலைக் கொட்டிலிலே கோயில் அமைத்தவராகிய அம்பாளுடன் இரண்டறக் கலந்த தங்கள் தந்தையார் சிவஸ்ரீ சிவலோகநாதக்குருக்கள் அருளாசியுடன் பார்த்தோர் உள்ளத்தைப் பரவசப்படுத்த வல்ல பக்த சிரத்தையாக



இருகண்மணிகள்போல இணைபிரியாது அற்புதமாக இராஜகோபுரத்தை அமைத்து ஊருக்கு அன்பு புகட்ட வழிகாட்டியாக இருக்கும்.....

சிவஸ்ரீ இராஜேந்திரக் குருக்கள் அவர்களையும்
சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள் அவர்களையும்
மனதாரப் பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

அன்பர் செ.வரப்பிரசாதம் குடும்பத்தினர்.

(15929)



## வழிகாட்டல் கருத்தரங்கு

தமிழ் மாணவர் ஒன்றியமும், வணிக மாணவ மன்றமும் இணைந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் க.பொ.த. (உ/த) 2003 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு, இன்று 27.03.2003, நாளை 28.03.2003 ஆகிய இரு தினங்களும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளதால் தவறாது அனைத்து மாணவர்களையும் கலந்து பயன்பெறும்வண்ணம் கேட்டுக்கொள்ளு கின்றோம்.

இடம் :- யாழ். மத்திய கல்லூரி (தும்பர் மண்டபம்)
காலம் :- வியாழன், வெள்ளி (27,28.03.2003)
நேரம் :- காலை 9 மணி

★ வழிகாட்டல் கருத்தரங்கில் பாடங்களுக்குரிய வினா - விடைக் கொத்துகள் இலவசமாக வழங்கப்படும்.-

விளம்பர அனுசரணை:-

**CAREER.COM. INSTITUTE**
**N9.70, MAIN STREET,**
**JAFFNA.**

(C/27005)


## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்
### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 29.03.2003 - காலை 9.00-பி.ப.4.00 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ்.மாநகரசபைப் பகுதி |
| 05.04.2003 - காலை 9.00-பி.ப.4.00 | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு, வடமராட்சி. |
| 20.04.2003 - காலை 9.00-பி.ப.4.00 | இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, கொம்பயன் மணல், ஆனைக்கோட்டை, நவாலி. |
| 03.05.2003 - காலை 9.00-பி.ப.4.00 | கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, இளவாலை, மருதனார்மடம், மானிப்பாய், உடுவில், சங்குவேலி, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை, யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

*'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'*
*இலங்கை மின்சார சபை* (சி-27005)


## தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.
நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
தொடர்பு:-
ஐ.மகேந்திரம்
வானவி தொலைத் தொடர்பு நிலையம்
பலாலி றோட், ஊரெழு.
(15962) 0777 - 732561



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### தி.மகாலிங்கம்

அவர்கள் கிராமசேவையாளர் தரம் I

1982 - 1987 காலப்பகுதியில் எமது பகுதியில் விசேட சேவை உத்தியோகத்தராகவும் 2000ஆம் ஆண்டுவரை கிராமசேவையாளராகவும் பணியாற்றி எமது கிராம வளர்ச்சியில் அயராது அக்கறையுடன் சேவைகள் பல புரிந்த தி.மகாலிங்கம் அவர்கள் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இன்று 50 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் அவரை எல்லா நலமும் பெற்று இனிது வாழ வாழ்த்துகின்றோம்.

மறவன்புலோ மேற்கு சனசமூக நிலையம்,
(C-37094) மறவன்புலோ வடக்கு விநாயகர் ச.ச. நிலையம்.


## நினைவில் நின்றகலா எம் அன்புத் தெய்வத்தின் பிறந்தநாள் நினைவலைகள் (38ஆவது அகவை)



### அமரர் பாலசிங்கம் நந்தகுமார்

ஆண்டுகள் பலவும் எம்முடன் வாழ்ந்து
ஆசையுடன் எமை அரவணைத்து
பாசமுடன் வாழ்ந்த தெய்வம்!
நீ மண்ணுக்குள் சென்றாலும்
கண்ணுக்குள் வாழ்கிறாய்
உன் 38ஆவது அகவையிலே.
உன் சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உனை வாழ்த்தி நினைவுகூரும்:-
அன்பு மனைவி - திவ்வியா.
பிள்ளைகள் - நந்துஷன், லக்ஷன்.
பெறாமக்கள் - துளசி, திவ்வியன்.
மைத்துனர்கள் - பாலகண்ணன், விஜியன்.

*இல.33, செம்மணி வீதி, யமுனாரி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.* (15959)

# ஈராக் நாட்டின் எண்ணெய் வளத்தை வசப்படுத்த நடத்தப்படும் போர்

**ஈராக் - அமெரிக்கப் போரில் அமெரிக்காவின் உள்நோக்கம் மற்றும் அதனால் எதிர்காலத்தில் உருவாகப்போகும் புதிய பிரச்சினைகள் குறித்து ஆராய்கிறார் கட்டுரையாளர் பிரதீப் சஞ்சீவ் கமகே. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளும் யுத்தம் தொடர்பான காரணங்களை அறியவேண்டுமாயின் அது குறித்துச் சற்று ஆழமாக ஆராயவேண்டும்.

பனிப்போரைத் தொடர்ந்து ரஷ்யா தோல்வியைத் தழுவியதால் அமெரிக்கா வல்லரசாக மாறியது. அதைத் தொடர்ந்து கொள்கையளவிலும், வியூகங்களை அமைப்பதிலும் அமெரிக்காவில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அதன்படி மேற்கொள்ளப்பட்ட கொள்கை மாற்றங்களில் மிக முக்கியமானது அமெரிக்க ஆதிபத்தியத்தை உறுதிசெய்யும் சாத்தியங்களைக் கொள்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதாகும். இதன்படி உலகில் எந்தவொரு நாடும் அமெரிக்காவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினால் அதைத் தடுக்கும் அதிகாரம் (ஆற்றல்) அமெரிக்காவுக்கு உள்ளது என்பதாகும்.

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்ஷின் தந்தையான ஜோர்ஜ் புஷ் குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்தபோது அதை ஐ.நா. பாதுகாப்புச் சபை எதிர்த்தவேளையில், ஈராக்மீது தாக்குதலை மேற்கொண்டார். காத்திருந்தவேளை கைகூடவே அவர் அந்தப் போரை ஆரம்பித்தார். இருப்பினும், அந்தப் போரை முற்றாக முடிவுக்குக் கொண்டுவர அவரால் முடியவில்லை. அவரின் மகனான தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் மற்றும் அவரது கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோரின் முக்கிய குறிக்கோள் என்னவெனில், ஈராக் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து ஈராக் அரசியலில் மாற்றம் கொண்டுவருவதேயாகும். அதாவது, அந்நாட்டில் அமெரிக்க சார்பு அரசை உருவாக்குவதாகும்.



அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தின் மீது அல்கெய்டா அமைப்பு மேற்கொண்ட தாக்குதலை அடுத்து பயங்கரவாதத்திற்கு எதிரான உலகின் கருத்தை உருவாக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. இதன்படி பயங்கரவாதத்திற்கு எதிரான உணர்வுகள் அமெரிக்க மக்களிடையே வலுப்பெற்றன. பயங்கரவாதத்திற்கு எதிரான இந்த உணர்வைப் பயங்கரவாதிகளுக்கு எதிராக மட்டுமன்றி, பயங்கரவாதத்தை ஊக்குவிப்பவர்களுக்கு எதிராகவும் வளர்ப்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகும். இவ்வாறான சூழ்நிலைகளை வாய்ப்பாகப் பயன்படுத்தியே அமெரிக்கா மீண்டும் ஈராக் மீது யுத்தத்தை ஆரம்பித்துள்ளது. அமெரிக்காவின் கவனம் ஈராக் பக்கம் ஈர்க்கப்பட்டதற்கு மிகவும் முக்கியமான காரணம் உள்ளது. அதாவது, ஈராக் நாட்டிலுள்ள எண்ணெய் வளங்கள் ஆகும். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஈராக் முக்கிய இடத்தை வகிக்கிறது. 1970 இல் உலகில் உருவான எரிபொருள் பிரச்சினைக்குப் பின்னர் எண்ணெய் வளங்களின் தேவைகள் குறித்து அமெரிக்கா நன்கு உணர்ந்துள்ளது. எங்கெல்லாம் எண்ணெய் வளங்கள் உண்டோ அவை எல்லாம் அமெரிக்காவின் ஆதிபத்தியத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும் என்பதே அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களின் நிலைப்பாடாகும்.

இதன்படி, அமெரிக்க வர்த்தக மையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து உருவான சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி தனது தந்தை விட்ட இடத்திலிருந்து போரை ஆரம்பிப்பது எனத் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தீர்மானித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி புஷ், ஆட்சிக்கு வந்ததே எண்ணெய் நிறுவனங்களின் உரிமையாளர்களின் உதவி ஒத்தாசைகளினால் என்பது வெளிப்படை. ஈராக் மீதான தாக்குதல் பற்றி ஆராயும்போது இந்தப் பின்னணி மிகவும் முக்கியத்துவமானது. அமெரிக்காவிலுள்ள எண்ணெய் நிறுவன உரிமையாளர்களின் உதவி, ஒத்துழைப்புகள் குடியரசுக் கட்சிக்குக் கிடைத்ததால் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சி வெற்றி பெறுவதற்குச் சிரமங்கள் ஏற்படவில்லை. தற்போதைய ஜனாதிபதி புஷ், மக்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை. பதிலாக அமெரிக்க உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பயனாகவே அவரது பதவி உறுதியானது.

இவை அனைத்தும் எதனை எடுத்துக் காட்டுகின்றன. அமெரிக்கா தனது ஆதிபத்தியத்தை விரிவாக்குவதற்கு உலகெங்கும் உள்ள எண்ணெய் வளங்களுக்கு உரிமையாளராக வர அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைகிறது. அமெரிக்காவின் கொள்கைகளை வகுப்பவர்கள் சுமார் 20 வருடங்கள் முன்னோக்கிய சிந்தனையின் அடிப்படையிலேயே கொள்கைகளை வகுத்துள்ளனர்.

குடியேற்ற வாதத்திற்கு எதிராகச் செயற்படும் கொள்கையின் அடிப்படையில் எண்ணெய் வளங்களைக் கொண்ட பல நாடுகள் தங்களது எண்ணெய் வளங்களைத் தேசியமயமாக்கிவிட்டன. அந்த எண்ணெய் நிறுவனங்களின் உரிமைகளை தனியார் மயப்படுத்தும் முயற்சிகளிலேயே தற்போது அமெரிக்கா ஈடுபட்டுவருகிறது. சவுதி அரேபியா என்ற நாடு அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளை ஆதரிக்கும் நாடுகளில் முக்கியமான நாடாகும். இருப்பினும், அல்கெய்டா அமைப்பினால் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை சவுதி அரேபிய எண்ணெய் நிறுவன உரிமையாளர் ஒருவரின் மகனே மேற்கொண்டுள்ளார். சவுதி அரேபியாவைச் சேர்ந்த மிகப்பெரிய தனவந்தரின் புத்திரனே அல்கெய்டா அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லேடன். சவுதி அரேபியாவில் வஹாப் மதக் கொள்கைகளே பின்பற்றப்படுகின்றன. இந்த வஹாப் மதக்கொள்கைகளில் முக்கியமானது 'ஜிகாத்' (புனிதப் போர்) ஆகும். ஆப்கானில் இடம்பெற்ற யுத்தங்களைத் தொடர்ந்து இந்த 'ஜிகாத்' பிரபலமடைந்து வருகிறது. இது பாகிஸ்தான், இந்தோனேஷியா போன்ற நாடுகளிலும் பரவிவருகிறது. இக்காரணத்தால் சவுதி அரேபியாவை தனது உற்ற நண்பனாகக் கருத அமெரிக்காவால் முடியாமலுள்ளது.

ஜனாதிபதி புஷ் ஒரு புறத்தில் எண்ணெய் வர்த்தகர்களின் நெருங்கிய நண்பராக விளங்குகிறார். மறுபுறத்தில் கிறிஸ்தவ அடிப்படை வாதத்திற்கு மதிப்பளிக்கிறார். கிறிஸ்தவக் கடும் கோட்பாட்டாளர்கள் என்பவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளாவர். அவர்களின் செயற்பாடுகள் இஸ்ரேலை ஆதரிப்பனவாகவும், இஸ்லாத்திற்கு எதிரானதாகவும் அமைந்துள்ளன. ஜனாதிபதி புஷ் இதுவரை ஈராக், ஈரான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளை தனது எதிரி நாடுகள் எனத் தீர்மானித்துள்ளார். அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின்படி தனக்கு அச்சுறுத்தலாக அமையும் எந்தவொரு நாட்டிற்கும் எதிராக நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது. எதிர்காலத்தில் இந்த உரிமை ஈரான் மீதோ அல்லது பாகிஸ்தான் மீதோ அல்லது வடகொரியா மீதோ பரீட்சிக்கப்படலாம். அண்மையில் ஆப்கானில் இதுவே நடைபெற்றது.

அமெரிக்கா மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் ஜனநாயகச் சமூதாயத்திற்குப் பொருத்தமானது? என்பது குறித்து சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது. அமெரிக்காவின் ஜனநாயக முறைகள் குறித்து ஆராயும்போது அந்த நாட்டு மக்களில் 50 சதவீதத்திற்கு அதிகமானோர் இந்த யுத்தத்தை ஆதரிக்கின்றனர் எனத் தெரிகிறது. அமெரிக்காவில் குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றுக்கு இடையே சிற்சில வேறுபாடுகள் காணப்படினும் யுத்தம் ஒன்றை எதிர்நோக்கும்போது அந்த இரு கட்சிகளும் ஏதோ ஒரு உடன்பாட்டிற்கு வந்துவிடுகின்றன. அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் யுத்தத்தைப் பிரகடனம் செய்யும்போது கட்சி பேதமின்றி அதற்கு கொள்கை ரீதியாக உடன்படுவது அந்நாட்டு மரபுவழி வழக்கமாகும். தற்போதும் அந்நிலைமையே அங்கு காணப்படுகிறது.

உலக நாடுகளைச் சேர்ந்த 80சதவீதமான மக்கள் ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை எதிர்க்கிறார்கள். ஆனாலும், உலக மக்களின் கருத்து அமெரிக்கத் தலைவர்களைக் கட்டுப்படுத்தவில்லை என்பதே யதார்த்தம்.


அமெரிக்கா தற்போது இவ்வாறு செயற்பட்டாலும் உலக அமைதியைப் பாதுகாப்பது தொடர்பாக அமெரிக்கா ஆற்றிய பணியை நாம் மறந்துவிடமுடியாது. அமெரிக்கா மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைகளில் முக்கியமானதாக யூகொஸ்லோவியப் பிரச்சினையைக் குறிப்பிடலாம். யூகொஸ்லோவிய ஜனாதிபதி மிலோசொவிக் யுத்தக் குற்றவாளியாக்கப்பட்டது மாத்திரமன்றி, பெரும்பான்மையினரான பொதுமக்களுக்கு ஜனநாயக முறையில் வாழ வழி சமைக்கப்பட்டது.

2ஆவது உலக யுத்தத்தின் பின்னர் உலகிலுள்ள பல நாடுகள் 3 ஆவது உலக யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை. இதன் பலனாகவே ஐநா.சபை உருவாக்கப்பட்டது. இருப்பினும், தற்போதுள்ள யுத்த சூழ்நிலையில் ஐ.நா.சபை முற்றிலும் பொருந்தாத கொள்கையினை அனுசரிக்கிறது என்பதே பலரின் கருத்தாகும். இந்தக் கருத்துக் குறித்து சற்றுச் சிந்திப்பது பயன் தரத்தக்கதாகும்.

இதுவரை ஈராக் ஐ.நா.சபையின் அடிப்படைக் கொள்கைகளையும் பல நிபந்தனைகளையும் மீறியுள்ளது. அதேபோலவே, அமெரிக்காவின் தற்போதைய செயற்பாடுகளும் சர்வதேச சட்டங்கள் மற்றும் உடன்பாடுகளை துச்சமாக மதிப்பதாக - எள்ளிநகையாடுவதாக - அமைந்துள்ளன. இது எதிர்காலத்திலும் இடம்பெறக்கூடிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

தன்னுடைய எதிரிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் சர்வதேச சட்டதிட்டங்களை மீறுவதற்கும் அமெரிக்காவுக்கு ஆற்றல் உண்டு எனில், அதற்கு சமமான உரிமை ஏனைய நாடுகளுக்கும் இருத்தல் வேண்டும். அமெரிக்காவுக்கு இருக்கும் உரிமை தென்னாசிய வட்டகையில் ஆற்றல் மிக்க நாடான இந்தியாவுக்கும் இருத்தல் வேண்டும். இதன்படி தனது எதிரியெனக் கருதும் பாகிஸ்தான் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமை இந்தியாவுக்கு உள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையானது உலகிலுள்ள ஏனைய நாடுகளுக்கும் பொருந்தும் விதத்தில் அமைந்துள்ளது.

இந்தப் பிரச்சினையில் ஒரு தரப்பான ஈராக் ஜனநாயக வழிமுறையில் அமைந்த நாடு அல்ல. சதாம் ஹுசைன் ஆட்சியைக் கைப்பற்றிய போது பெரும் எடுப்பில் மக்கள் கிளர்ச்சி உருவானது. இருப்பினும், சதாம் ஹுசைன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் ஜனநாயக வழிமுறைகளையும் ஒழித்துக்கட்டிவிட்டன. அத்துடன், அவருக்கு நிரந்தரமான ஒரு நிலையையும் உருவாக்கிவிட்டன. அதிகாரத்தை எதிர்த்த கட்சிகள் அழிக்கப்பட்டன. குறிப்பாக ஈராக்கில் வாழ்ந்த சிறுபான்மை இனமான குர்திஷ் இனமக்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியே அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இருப்பினும், ஈராக்கில் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை அமெரிக்காவும் பிரிட்டனும் கண்டுங்காணாததுபோல் பார்த்துக் கொண்டிருந்தன. அப்போது அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்கின நண்பர்களாக விளங்கியதே அவர்கள் அமைதி பேணுவதற்கான காரணமாகும்.




மத்திய கிழக்கு நாடுகளில் ஜனநாயகம் நிலைபெறவேண்டும் எனக் கூறும் அமெரிக்கா, ஈராக்கில் உள்ள ஆயுதங்கள் தொடர்பாக மட்டும் கேள்வி எழுப்புவது நியாயமான நடவடிக்கையா? அப்படியானால் இஸ்ரேல், சவுதி அரேபியா மற்றும் சிரியா ஆகிய நாடுகள் வசமுள்ள ஆயுதங்கள் குறித்து அக்கறை எடுக்காதது ஏன்?

ஈராக்கிற்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான யுத்தத்தை நல்ல மனிதர்களுக்கும் கெட்ட மனிதர்களுக்கும் இடையேயான யுத்தம் எனக் கருதமுடியாது. சதாம் ஹுசைன் என்பவர் ஈராக் நாட்டை அழித்த தலைவர். அந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்த தலைவர். ஈரான் நாட்டுடன் தொடுத்த போர் காரணமாக சுமார் 10லட்சம் ஈரானிய படைவீரர்கள் பலியானதற்குக் காரணமான தலைவர். இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள சதாம் ஹுசைன் தயாராக இல்லை. அதன பின்னர் குவைத் நாட்டை ஆக்கிரமித்து மேலும் பல்லாயிரக்கணக்கான படைவீரர்கள் பலியாகக் காரணமானவர். இவை அனைத்திற்கும் அமெரிக்கா கூறும் பதில் என்னவெனில், ஈராக் நாட்டை சதாம் ஹுசைனிடம் இருந்து மீட்டு அந்நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கவுள்ளதாம். இதேபோன்றே ஆப்கான் மீது படையெடுத்தபோதும் அமெரிக்கா தெரிவித்திருந்தது. இருப்பினும், அமெரிக்கா கூறியபடி நடைபெற்றதா? ஈராக்கிலும் அவ்வாறான நிலைமை உருவாகாது என எவ்வாறு கூறமுடியும்? எனவே, பல ஆண்டுகள் சென்றாலும் அந்நாட்டில் ஜனநாயக வழிமுறைகளை உருவாக்குவது மிகவும் கடினமான விடயமாகும். ஒருவேளை ஈராக் நாடு பல்வேறு துண்டுகளாகப் பிரிக்கப்படவோ அல்லது பிரிந்து செல்லவோ கூடும். அவ்வாறு அந்த நாடு துண்டாடப்படுமாயின் அதிகமான எண்ணெய்க் கிணறுகள் அமைந்துள்ள பிரதேசங்களின் நிர்வாகம் அமெரிக்கா சார்புடையவர்களின் கைகளுக்கு எட்டக்கூடும். நாடு துண்டாடப்படினும் சமஷ்டி முறையிலான அரசியல் முறையை அங்கு அறிமுகப்படுத்தலாம். இருப்பினும், அதை எவ்வாறு மேற்கொள்வது என்பதும் பிரச்சினைக்குரியதே.

அமெரிக்காவிலுள்ள உலக வர்த்தக மையத் தாக்குதலையடுத்து அமெரிக்காவுக்கு குறிப்பிடத்தக்க அளவு மனவுறுதி ஏற்பட்டிருந்தாலும் தற்போதுள்ள நிலையில் அந்த உறுதி குலைந்துவிட்டதாகவே தோன்றுகிறது.

உலக சனத்தொகையில் சுமார் 80 சதவீதமான மக்கள் அமெரிக்காவின் நடவடிக்கையை எதிர்க்கின்றனர். சர்வதேச சட்ட திட்டங்களை அமெரிக்கா மீறிய செயலானது பல புதிய பிரச்சினைகளை உலகம் எதிர்நோக்க வேண்டிய நிலைமையை உருவாக்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் இவ்வாறான செயல்களால் எதிர்காலத்தில் அந்நாட்டுத் தலைவர்கள் குற்றவிசாரணை மன்றங்களின் முன்னிலையில் நிறுத்தப்படக்கூடும்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் சாதாரண பொதுமக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. சாதாரண பொதுமக்கள் மீது குண்டுகளை வீசுவது போர் விதிகளுக்கு முரணான செயலாகும். எதிர்காலத்தில் இவற்றிக்கு அமெரிக்கா பதிலளிக்க நேரிடும்.

அமெரிக்காவின் ஆதிபத்தியத்தை நிலைநாட்ட அந்நாட்டிற்கு ஆற்றல் மிக்க படைகள் தேவை. ஈராக் யுத்தம் முடிவடையும்போது உலகெங்கும் வியாபித்துள்ள அவர்களது ஆதிபத்தியம் பலவீனமடையக்கூடும். ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் அமெரிக்காவின் நடவடிக்கையை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்துள்ளன. அதேநேரம் உலகிலுள்ள பலநாடுகளும் அமெரிக்காவின் செயலைக் கண்டித்துள்ளன.

ஆதிபத்திய அவா எப்போதோ ஒருநாள் முடிவுக்கு வந்தே தீரும். ரோம ராச்சியம் வீழ்ச்சியடைந்தும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்தும் இதை உறுதிப்படுத்துகின்றன.

ஈராக் யுத்தத்தின் பின்னர் மத்திய கிழக்கில் என்ன நடக்கும் என்பது குறித்து சற்றுச் சிந்திப்போம். இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினை மேலும் விரிவடையக்கூடும். தற்போது இஸ்ரேலில் ஆட்சியிலுள்ள வலதுசாரி சக்திகள் பலஸ்தீன மக்களுக்கு எதிராக வெகுண்டு எழும் ஆற்றலை இந்த யுத்தம் அவர்களுக்கு வழங்கக்கூடும். ஈராக்கிற்கு எதிராக நடவடிக்கைகளை அமெரிக்காவால் மேற்கொள்ள முடியுமாயின் பலஸ்தீனியர்களுக்கு எதிராக தாங்கள் ஏன் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என இஸ்ரேலியர்கள் வினா எழுப்பலாம். அமெரிக்காவுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து தங்களது நிர்வாகத்தை மேற்கொள்ளவே அதிகமான அரபு நாடுகள் விரும்புகின்றன. இருப்பினும், புதிய நிலைமை உருவாகும்போது அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி விட்டு பயங்கரவாதத்திற்கு (இஸ்ரேலுக்கு) எதிராகப் போர்க்கொடி தூக்கவேண்டிய நிலைமை அரபு நாடுகளின் நிர்வாகிகளுக்கும் அந்நாடுகளின் மக்களுக்கும் உருவாகும்.

அமெரிக்க - ஈராக் யுத்தத்தைத் தொடர்ந்து அமெரிக்க டொலருக்கும்

(13ஆம் பக்கம் பார்க்க)

**தமிழில்: கஜனி**

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல் -2003

2003 ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 31.03.2003 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | 15% |
| ஏனைய காணிகள் | 20% |

நிலுவை உட்பட 2003 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபையின் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252, பிரிவு 252 இன்படி நடுக்கட்டல் மூலம் அசையுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*17.03.2003.* (C - 27013)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


# கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை நெற்செய்கை அமோக விளைச்சல்

## அம்மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்27

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை நெல் விளைச்சல் அமோகமாக உள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி பற்றிக் கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 9ஆயிரத்து 800ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெல் செய்கை பண்ணப்பட்டு வந்தது. இம்முறை 17 ஆயிரத்து 866 ஹெக்டேயர் நிலப் பரப்பு நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. இதில் நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ளது.

வழமையாக ஒரு ஹெக்டேயருக்கு 50முதல் 60புசல் வரையே விளைச்சல் கிட்டும். ஆனால், இந்தத் தடவை சில இடங்களில் 105புசல் வரை விளைச்சல் கிடைத்துள்ளது.

கூடுதலான விளைச்சல் ஏற்பட்ட போதும் விவசாயிகள் தகுந்த விளைவைப்பெறமுடியாத நிலையில் உள்ளனர். நெல்லின் நிர்ணயக் கொள் விலை புசலுக்கு 910ரூபாவாக இருந்த போதும் விவசாயிகள் 700ரூபா முதல் 800ரூபா வரையிலேயே விற்பனை செய்யக் கூடியதாக இருக்கின்றது.

விற்பனை விலை வீழ்ச்சியடையாமல் இருப்பதற்காக 5கோடி ரூபாவுக்கு நெல்லை நாம் கொள்வனவு செய்துள்ளோம். நிலையான சந்தை வாய்ப்பு இல்லாத காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார் அவர். (ஒ-3)


## தேவை

எமது விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு:-
**Stationary Shop**
இல.159, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம். (16005)


## ஓராண்டு நினைவில்



மலர்வு 1978 - 08 - 23

உதிர்வு 2002 - 03 - 27

### உமாபாரதி மகேசு

(முகாமைத்துவ 2ஆம் வருட மாணவி, வவுனியா வளாகம்)

உமா!
ஓராண்டு கடந்ததென்ன
ஓராயிரம் ஆண்டே ஆனாலும்
நீங்காத நினைவெமக்கு
நீ!

*உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

*249/1, நாயன்மார் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (16007) **அப்பா, அம்மா, சகோதரர்கள்.**


## விற்பனையாகிறது!

ஈழத்தின் அதிசிறந்த மாத சஞ்சிகை முதன் முறையான வெளியீடு.

மேலாண்மை: செ.யோகநாதன்

**புதினம்**

சமூகம், கலை, இலக்கியம் - (மார்ச் - 15.2003)

விலை ரூபா 40/-மட்டுமே.
வியாபாரிகளுக்கு 15% கழிவு

வடமாநில ஏக விநியோகஸ்தர்:-
☆ ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2573

☆ உற்பத்தி முகாமைத்துவம்
உயர் பட்டப்படிப்பிற்குரியது
PRODUCTION MANAGEMENT
க.தேவராஜா, தலைவர், வணிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

☆ உயிரியல் - BIOLOGY
STUDY GUIDE - தொழிற்படும் தாவரம்-1
பரீட்சை வழிகாட்டல் குறிப்புகள்
மாதிரி வினாக்கள் மற்றும் விடைகள்.
எஸ்.செல்வநேசன். (16001)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| *சீட்டிழுப்பு வாரம் | 460 |
| திகதி | 25.03.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4833651-4848225

**வெற்றி இலக்கங்கள்** 09 18 36 41

**லக்கினம்**
மேடம்

**ஜக்பொட் பரிசு ரூபா. 5,480,350/- வெல்லப்பட்டது.**



இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 323,464 | 10 | 3,234,640 |
| 2 இலக்கங்கள் | 29,770 | 20 | 595,400 |
| 1 இல + லக்கினம் | 29,527 | 30 | 885,810 |
| 2 இல + லக்கினம் | 2,662 | 100 | 266,200 |
| 3 இலக்கங்கள் | 794 | 500 | 397,000 |
| 3 இல + லக்கினம் | 63 | 5,000 | 315,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 5,480,350 | 5,480,350 |
| மொத்தம். | 386,285 | - | 11,574,400 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **11,574,400/-**

தொடர் இல. 5826043க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 28ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4843052-0-06**
**4835605-1-44**
**4842688-0-74**
**4847451-4-64**
**4838310-8-13**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 31, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ருத் சதானந்தன்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ருத் சதானந்தன் நேற்று (26.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஜோசவ் பெனடிக்ற் சதானந்தனின் (டோனாஸ்) அன்பு மனைவியும் ஹரிந்திரனின் அன்புத் தாயாரும் பெரிற் (Berit) இன் அன்பு மாமியாரும் கண்மணி, கண்ணன், குமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 38/1, பழைய பூங்கா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக இன்று (27.03.2003) வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு புனித மரியன்னை தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் ஆசனக் கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38/1, பழைய பூங்கா வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (16006) திரு.ஜோ.பெ.சதானந்தன் (டோனாஸ்)

## நமசிவாயம் நடராசா

(இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி)

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் முல்லைப்பிலவை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் நடராசா நேற்று(26.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் கணநாதன்(Ceylon biscuit Ltd - கொழும்பு), கலாதேவி, சிவநாதன் (சிறி மாயவா களஞ்சியம், சுன்னாகம்), காலஞ்சென்ற செந்தில்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வராசா (A.V.Ramanathan & Son- கிளிநொச்சி), பாலாம்பிகை, மதிவதனி ஆகியோரின் மாமனாரும் கஜரூபன், திவாகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.03.2003) வியாழக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*முல்லைப்பிலவு,* மனைவி, மக்கள், மருமக்கள்,
*காரைநகர்.* (16004) பேரப்பிள்ளைகள்.

## கந்தர் சுப்பிரமணியம் (கார் மணியண்ணை)

(வறுத்தலைவிளான்)

கட்டுவன், வறுத்தலைவிளானைச் சேர்ந்தவரும் தற்போது உரும்பிராய் கிழக்கு, கோப்பாய் வீதியில் வசித்தவருமாகிய கந்தர் சுப்பிரமணியம் 24.03.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கேதாரகௌரி அம்மாவின் அன்புக் கணவரும் கதிர்காமு (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்றவர்களான குலசிங்கம், இரத்தினம், ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகுணேஸ்வரி (ஜேர்மனி), சுகுமாரி (லண்டன்), சுசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீசன் (ஜேர்மனி), ஆனந்தன் (லண்டன்), குமுதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷா, நிரேன், நிரோஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2003) வெள்ளிக்கிழமை மு.ப.10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வீதி,* தகவல்:
*உரும்பிராய் கிழக்கு,* கேதாரகௌரி அம்மா(மனைவி),
*உரும்பிராய்.* (16003) சேவையர் சின்னத்துரை(மருமகன்)

# ஆவணச் சோதனை என்ற பெயரில் பணம் பறிக்கும் பொலீஸார் குறித்து தகவல்தரக் கோருகிறார் அதிகாரி

## லஞ்சத்தை ஊக்குவிக்க வேண்டாமெனவும் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச்27

வாகன ஆவணங்கள் பரிசோதனை என்ற பெயரில் பணம் பறிக்கும் பொலீஸார் குறித்து உடனடியாகத் தமக்குத் தகவல் தருமாறும் -

அதைவிடுத்து பொதுமக்கள் பொலீஸாருக்கு பணம் கொடுத்து லஞ்சக் கலாசாரத்தை ஊக்குவிக்க வேண்டாம் எனவும் - யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த செனிவிரட்ண வேண்டுகோள்விடுத்துள்ளார். வீதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலீஸாரில் சிலர் பணம் பறிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பாகக் கேட்டபோது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வீதிப்போக்குவரத்து தொடர்பான பணிகளில் ஈடுபடுவதற்கு போக்குவரத்துப் பொலீஸாருக்கு மாத்திரமல்லாது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலீஸாருக்கும் உரிமை உண்டு. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் எந்த நடவடிக்கையிலும் அவர்கள் தடையில்லாமல் ஈடுபடமுடியும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே அவர்களது பிரதான பணி. ஆனால், தமது பணி தொடர்பாக பணத்தை நேரடியாக பொலீஸார் கையாள்வதில்லை.

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்துவோரிடமும், வீதி ஒழுங்குகளை மீறும் அல்லது விபத்துக்குள்ளாகும் வாகனங்களின் சாரதிகளிடமும் வாகன ஆவணங்களை குடாநாட்டில் பொலீஸார் சோதனையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன ஆவணங்கள் வழங்குவதில் நிலவும் தேக்க நிலையைக் கருத்தில் கொண்டே இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பொலீஸாரினால் தண்டம் விதிக்கப்படும் பட்சத்தில் தண்டத் தொகை குறிப்பிடப்பட்ட சீட்டினை பொலீஸாரிடமிருந்து பெற்றுத் தபாலகத்தில் தண்டத் தொகையை சம்பந்தப்பட்ட சாரதி செலுத்தவேண்டுமே தவிர, பொலீஸாருக்கு பணம் கொடுத்து தப்பிக்க முயற்சிக்கக் கூடாது. தண்டத் தொகை செலுத்தப்படுவதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது அது போன்ற ஆவணம் ஒன்றை வாங்கி வைத்துக்கொள்ள பொலீஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வாகனத்தை நிறுத்திவிட்டுச் செல்லும்படி கூற பொலீஸாருக்கு உரிமை அளிக்கப்படவில்லை.

சட்டம் - ஒழுங்கு என்ற பெயரில் லஞ்சம் பெறமுற்படும் பொலீஸார் தொடர்பான அவர்களது இலக்கம், பணியில் உள்ள இடம் முடிந்தால் பெயர் போன்ற - சரியானதும் தெளிவானதுமான தகவல்களை நேரிலோ அல்லது தொலைபேசிமூலமோ எமக்குத் தந்தால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். இதனைவிடுத்து பொலீஸாருக்குப் பணம் கொடுத்து லஞ்சக் கலாசாரத்தை வளர்க்க யாரும் முன் வர வேண்டாம்.

- இவ்வாறு பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஓ-8-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்27

வலி.தெற்கு பிரதேச செயலக வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிப 1.00 மணிக்கு சுந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் வலி.தெற்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.தூர். ஜெயப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் கலந்துகொள்வார். (ஓ-5-ரி)

★ ★ ★

கைதடி 'நவீல்ட்' பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் மு.ப 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில இடம்பெறவுள்ளது. சிறுவர் பாதுகாப்பு நிதிய மாவட்ட இணைப்பாளர் டாக்டர் அலஸ்டயர் ஜேம்ஸ் கிர்க் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

தென்மராட்சி கல்வித் திணைக்கள மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் கல்விப் பணிப்பாளர் மு.ப.செல்வராசா தலைமையில் நடைபெறும் இதில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்துகொள்வார்.

(ஓ-31-177-170)

# போலிச்சாவியைப் பயன்படுத்தி மோ. சைக்கிள் திருடும் கும்பல்!

## குடாநாட்டில் நடமாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.குடாநாட்டில் தற்போது புதிதாகப் பாவனைக்கு வந்துள்ள புதிய ரக மோட்டார்சைக்கிள்களை போலிச்சாவியைப் பயன்படுத்தி திருடிச் செல்லும் கும்பல் ஒன்று நடமாடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் தற்போது புழக்கத்துக்கு வந்துள்ள புதியரக மோட்டார் சைக்கிள்களே இப்போலிச் சாவியைப் பயன்படுத்தி திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30மணியளவில் யாழ்.மின்சார நிலைய வீதியில் ரி.வி.எஸ்.விக்ரர் ரக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அருகில் இருந்த கடைக்குச் சென்ற அதன் உரிமையாளர் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக யாழ்.பொலீஸ நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மோட்டார்சைக்கிளும் இப்போலிச் சாவிமூலம் திருடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளை நிறுத்தும்போது அவற்றிற்கான கைப்பிடிப் பூட்டுக்களையும் (Handle lock) பூட்டிச் செல்லுமாறும் கூடியவரையில் நிறுத்திவிட்டுச் செல்லும் மோட்டார் சைக்கிளை அடிக்கடி பார்த்துக் கண்காணிக்குமாறு பொலீஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஓ-8-9)

# திருடர்களைக் கட்டுப்படுத்த வெளியே செல்லும் வேளைகளில் அதிக நகைகளை அணியாதீர்கள்!

## யாழ்.பொலீஸ் அதிகாரி அறிவுறுத்து

வழிபாட்டிடங்கள், பொது நிகழ்வுகள் மற்றும் மங்கள விழாக்களுக்குச் செல்லும் பொது மக்கள் அளவுக்கு அதிகமான நகைகளை அணிந்து செல்வதைத் தடுப்பதன் மூலம் பெருமளவு களவுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பொலீஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரேமரட்ண.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது நிகழ்வுகள், வழிபாட்டிடங்கள் என்பனவற்றுக்குச் செல்லும் பொதுமக்கள் அளவுக்கதிகமான பணத்துடனும், நகைகளை அணிந்தும் செலவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அளவுக்கதிகமான நகைகளை பொதுமக்கள் அணிந்து செல்வது திருடர்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடுகின்றன.

தற்போது யாழ்குடாநாட்டில் களவு பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் பொதுமக்கள் எச்சரிக்கையாக இல்லாமையே. கூடுதலான களவுகள் வீடுகளிலேயே இடம்பெறுகின்றன. பொதுமக்கள் தம்மிடம் உள்ள நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்களை தகுந்த பாதுகாப்பான இடங்களில் வைக்க வேண்டும். தமது வீடுகளுக்கு அருகாமையில் சந்தேகத்துக்கிடமானவர்கள் நடமாடினால் அது பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும். பொலீஸாருக்கும் தெரிவிக்க வேண்டும்.

பொது இடங்களில் தமது வாகனத்தை நிறுத்தும் போது தகுந்த பாதுகாப்புள்ள இடத்தில் நிறுத்த வேண்டும். சைக்கிள்களை நிறுத்துவோர் அதற்கு மேலதிகமாக ஒரு பூட்டை உபயோகித்து அதனைப் பூட்டிவிட வேண்டும். திருடர்கள் தொடர்பாக மக்கள் முன்னரே சந்தேகம் கொண்டால் அது தொடர்பாக பொலீஸாருக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பின்பற்றி பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்படுவார்களானால் பெருமளவு களவுகளை தடுத்து நிறுத்த முடியும் என்றார்.

இதேவேளை -

நல்லூர் முதலாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் அதிகாலை வீட்டுயன்னல் கம்பியை வெட்டி உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து நான்கு உடுப்புப் பெட்டிகளை யன்னலூடாக வெளியே எடுத்து அவற்றில் ஒரு உடுப்புப் பெட்டியில் இருந்த மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான 35 பவுண் தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளதாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-8-9)

# மகளை வல்லுறவுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் தந்தை கைது!

## அவரை விளக்கமறியலில் வைக்க ஆணை

யாழ்ப்பாணம்,மார்ச்27

பதின்மூன்று வயதுடைய தனது மகளை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் யாழ்.ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையை யாழ்.பொலீஸார் கைதுசெய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்செய்தனர். சந்தேக நபரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்நீதிமன்ற நீதவான் ஆர்ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த (மொஹமட் ஹாசிம் (வயது 36) என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாயார் வெளியூர் சென்றிருந்த சமயம் ஒருநாள் மது போதையில் வந்த தந்தை மகளை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் - தாயார் வெளியூரிலிருந்து திரும்பியதும் இது தொடர்பாக சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்ததாகவும்-

இதனையடுத்து தாயார் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-8-9)

# மனித உரிமை தொடர்பான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்27

ஐரோப்பிய மனித உரிமை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நடத்தும் "சமாதான வழிமுறையில் மனித உரிமை" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மனித உரிமை ஆணைக்குழுவின் அரசியல் யாப்புச் சபையைச் சேர்ந்த ஆர்.சி.கருணாகரன், சட்டத்தரணி ரெமீடியஸ் மற்றும் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியும், இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்ட இணைப்பாருமான ரீரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர்.

இதில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், அரச திணைக்களத் தலைவர்கள் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், பொலீஸ் மற்றும் படைத்தரப்பினர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன மோதலுக்கு அரசியல் வழிமுறைமூலம் தீர்வு ஒன்றினைச் சமாதான வழியில் எட்டுவதற்கு ஏதுவான சூழல் ஒன்றை உருவாக்கி அதனை மேம்படுத்துவதே இக்கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-5)

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச்27

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு "சமய வாழ்வு" என்ற விடயம் குறித்துச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-5)

# வெறும் கோஷமாக நோக்காது தமிழர் வாழ்வின் எதிர்காலமாகவே சமாதானத்தைப் புலிகள் பார்க்கின்றனர்!

## யாழ்.அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி உரை

யாழ்ப்பாணம்,மார்ச்27

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை வெறும் கோஷமாகப் பார்க்கவில்லை. தமிழ் மக்களது வாழ்வின் எதிர்காலமாகவே அதனைப் பார்க்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி. நிதர்சனம் மகளிர் பிரிவு வழங்கிய 'உப்பில் உறைந்த உதிரங்கள்' முழு நீளத்திரைப்பட வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இளம்பரிதி மேலும் கூறியதாவது:-

இன்றைய உலகில் குறிப்பிடத்தக்க போராட்ட சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திகழ்கிறது. எமது தேசம், சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் விடுதலை அடையும்போது பரிபூரணமான பெண் விடுதலையும் கிடைக்கும்.

தூய்மையான திராவிட கலாசாரத்தில் ஆரிய கலாசாரம் கலப்புற்று ஆணாதிக்கம் போன்ற பிற்போக்கு வழக்கங்களைப் புகுத்தியது. ஓர் அடக்குமுறை நிலவும் சமூகத்தில் உள - உடல் ரீதியாக அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே! பெண்களைச செயற்கையாகப் பலவீனப்படுத்துகின்ற ஆண் சமூகம் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இன்றும்கூட, குறிப்பாக நெடுந்தீவு மற்றும் வேலணைப் பகுதிகளில் பெண்கள் எதிர்நோக்கும் இம்சைகள் கொடுமையானவை. அவர்கள் கிணற்றடிக்குச் செல்வதற்குக்கூட அஞ்சும் நிலைமையை அங்குள்ள படையினர் ஏற்படுத்தியுள்ளனர். மிகக் கீழ்த்தரமான முறையில் படையினர் நடந்து கொள்கின்றனர். பெண்கள் அமைப்புக்கள் என்று கூறிக்கொள்வனவும் இவற்றைக் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. பெண்களின் சாதாரண பிரச்சினைகளைக் கூட முன்னெடுத்துத் தீர்வுகாண அவ் அமைப்புக்கள் முயல்வதில்லை. எமது யாழ்.அரசியல்துறை அலுவலகத்தில், கடந்த எட்டு மாத காலப்பகுதியில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக மூவாயிரத்து 570 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. காதலித்து ஏமாற்றியமை தொடர்பாக ஆயிரத்து 20? முறைப்பாடுகளும், சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியமை குறித்து 15 முறைப்பாடுகளும் சீதனப்பிரச்சனை தொடர்பாக 823 முறைப்பாடுகளும், தற்கொலை முயற்சி தொடர்பாக 43 முறைப்பாடுகளும் பெண்கள் மீதான சேஷ்டைகள் குறித்து 620 முறைப்பாடுகளும், பெண்களை தூஷித்தல் தொடர்பாக 723 முறைப்பாடுகளும் பெண்கடத்தல் தொடர்பாக 6 முறைப்பாடுகளும் இவைதவிர்ந்த பெண்கள் தொடர்பாக 140 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இவற்றில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இவ்வாறு சி.இளம்பரிதி தெரிவித்தார். (ஓ-9)

## ஜீ.சீ.ஈ.உயர்தர வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்27

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவினரால் நடத்தப்படும் ஜீ.சீ.ஈ உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கும், புள்ளித்திட்டம் வழங்கல் தொடர்பான கலந்துரையாடலும் நாளை வெள்ளிக்கிழமை முதல் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை திருநெல்வேலியில் உள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின பிரபல ஆசிரியர்களால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் வர்த்தகப் பிரிவு மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

# உயர்பாதுகாப்பு வலயத்தில் நாய்த் தொல்லை அதிகரிப்பு!

## ஒழிக்க உதவுமாறு படையினர் கோரிக்கை

கரவெட்டி,மார்ச்27

வடமராட்சியில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் கட்டாக் காலி நாய்களின் தொல்லை அதி கரித்து விட்டதாகவும் -

ஆகவே, அவற்றை அழிக்க உதவுமாறும் -

அப்பகுதிப் படையினர் பருத்தித் துறை நகராட்சி மன்றச் செயலிடம் நேரில் முறையிட்டுள்ளனர்.

பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக் குள் சில நாய்களே நடமாடின. நாள டைவில் இனப்பெருக்கம் காரணமாக கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

இதனையடுத்தே இக்கட்டாக்காலி நாய்களை ஒழித்து உதவுமாறு கடந்த செவ்வாய்க்கிழமை நகர சபைச் செயலாளர் திருமதி கமலாசினி செலவநாயகத்திடம் படை அதிகாரி கள் நேரில் சென்று முறையிட்டுள்ள னர். (ஒ-70)

# ஈராக் நாட்டின்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

யூரோவுக்கும் இடையேயான பெறு மதியில் பெரும் வித்தியாசம் ஏற்பட் டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் உரு வானதற்குக் காரணம், அமெரிக்க ஆதி பத்தியத்தை அந்நாடுகள் நிராக ரித்த காரணத்தாலேயே ஆகும்.

இந்த யுத்தம் காரணமாக ஐரோப் பிய ஒன்றியம் மேலும் வலுவடைய நல்ல வாய்ப்புகள் உள்ளன. ஐரோப் பிய ஒன்றியத்தில் ஜேர்மனியும் பிரான்ஸும் பலம் மிக்க நாடுகளாக விளங்குகின்றன. ஐரோப்பிய ஒன்றி யம் ஒருபுறமிருக்க மறுபுறத்தில் சீனாவும், ரஷ்யாவும் அமெரிக்காவின் நடவடிக்கைகளை எதிர்க்கின்றன. எனவே, அமெரிக்காவின் இந்த நட வடிக்கைகள் 3ஆவது உலக யுத்தம் வரை இட்டுச் செல்லவும் கூடும்.

அமெரிக்க - ஈராக் யுத்தமானது வளர்ந்து வரும் நாடுகளுக்கு பெரும பாதிப்புகளை உருவாக்கலாம். தற் போது அமெரிக்காவுக்கும் இந்தியா வுக்கும் இடையே பாதுகாப்பு உடன் பாடு கைச்சாத்திடப்படவுள்ளது. இவ் வாறான சூழ்நிலையில் உலக நாடு கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஐ. நாவை வலுப்படுத்தவேண்டும். எக் காரணம் கொண்டும் மேற்கொள்ளப் படும் யுத்தத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் இவ்வாறான யுத்தங்கள் 3ஆவது உலக யுத்தத் திற்கு வித்தாக அமையலாம். ★


## உவகையுடன் வாழ்த்துகின்றோம்



கிராம அலுவலர் சேவையில் தரம் I இற்கு
பதவி உயர்வு பெற்றதுடன்
சமாதான நீதிவானாகவும் உயர்வு பெற்ற,
கணேஸ்வரம் யா/218 பிரிவு கிராம அலுவலரான,

திரு. செல்லையா சிவயோகநாதன்

அவர்கள் தனது சேவையில் மேலும் பல உயர்ச்சி களைப் பெற்று சகல சிறப்புக்களுடன் பல்லாண்டு காலம் வாழ பேருவகையுடன் வாழ்த்துகின்றோம.

அப்புக்குட்டி குடும்பத்தினா
"நாகம்ஸ்"
தொலைத்தொடர்பகம்.
021-222-5695

*கணேஸ்வரம்,*
*கருகப்புலம், அளவெட்டி.* (16014)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய
வித்தியாசாலை மாணவன்
செல்வன்
கமலேஸ்வரன் துவாரகன்

அவர்கள் கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் 132 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையினையிட்டு அவரையும், அவரை வழிநடத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*யா/வரணி இடைக்குறிச்சி*
*ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை.* (16011)
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலி. மேற்கு பிரதேச செயலகத்தைச்
சேர்ந்த பண்ணாகம் (ஜே-175)
கிராம உத்தியோகத்தா
திருமதி
திலகவதியார் சிவபாக்கியநாதன்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(16013) - காலையடி தெற்கு மக்கள்.

## புத்தூர் கிழக்கு அருள்மிகு தேரம்பிள்ளை சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன சம்புரோக்ஷண பஞ்சகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனித் திங்கள் 13 ஆம் நாள் இன்று (27. 03. 2003) வியாழக்கிழமை அதிகாலை 6. 00 மணிமுதல் 7. 00 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

*பிரதிஷ்டா பிரதமகுருமணி*
*ஸ்ரீ வித்தியா கல்பநிதி சிவாகம திவாகரன்*
*சாகித்ய சிரோமணி*
சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்
வட. கோவை
*பிரதிஷ்டா வித்தகர்*
சிவஸ்ரீ வே.நடராஜக்குருக்கள்
ஆவரங்கால் சிவன் தேவஸ்தானம்

அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் இஷ்டசித்தி களைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(16009)
தேரம்பிள்ளையார்
தேவஸ்தானம்.


## விளையாட்டு நிகழ்வுகள்

காரைநகர்,மார்ச்27

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கிடையேயான விளை யாட்டுப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பி.ப. 2.30 மணிக்கு ஊர்கா வற்றுறை புனித அந்தோனியார் கல் லூரி விளையாட்டு மைதானத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்செல்வநாயகம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-73)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலய மட்டத் திலான மெய்வன்மைப் போட்டிகள் கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் யாழ்.பல் கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேரா சிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-6)

## விருது வழங்கல் நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையின் விளையாட்டு அவையி னால் நடத்தப்பட்ட உள்ளக, வெளிக் கள உடலாளர் போட்டிகளில் சிறந்த வெளிப்பாடுகளைக் காண்பித்துத் தெரி வான வீரர்களுக்கான விருது வழங் கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு கலாசாலையில் இடம்பெற வுள்ளது. இந்த நிகழ்வில் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

## அபிவிருத்திக்குழு அலுவலகம் திறப்பு

திருகோணமலை,மார்ச்27

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு அலுவலகத் திறப்புவிழாவும், மீள் குடியமர்பவர்களுக்கான 500 வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் முதற் கட்டமாக 12 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை திரியாய் கிராமத்தில நடைபெறுகின்றன. (ஒ-290)


## தேவை

ரைப் செற்றிங் தெரிந்த
பெண்கள் தேவை.
கிருஸ்ணா பிரின்டேர்ஸ்
சுப்பிரமணியம் வீதி,
*(அந்தோனியார் கோவிலுக்கு அருகில்)*
சுன்னாகம். (C-27018)

## தேவை

ஓவியம் பயில
ஆர்வமுள்ளவர்கள் தேவை
*★ பயிற்சிக் காலத்தில் 1500 ரூபா*
*ஊக்கவிப்புப் பணம் வழங்கப்படும்*
முன்பு விண்ணப்பித்தவர்களும்
இன்று (27.03.2003) வியாழக்கிழமை
நேரில் வரவும்.
விவரங்களுக்கு:
யசோ
இல.35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
0777 - 110610
(16015)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும் (C/27010)

நிறைஞ்சனாஸ்
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
மாயி
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு
HOLLOW MAN

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா,
விஜயச்சக்கரவர்த்தி, சுபாஷ் நடித்த
சொக்கத்தங்கம்
(இனிய பாடல்கள் நிறைந்த திரைப்படம்)
(16019)


அரசிடம் ரெலோ நிதி பெறுவதில்லை

# அடைக்கலநாதனின் கருத்தை வரவேற்று சங்கரி அறிக்கை

கொழும்பு,மார்ச்27

ரெலோ அமைப்பு அரசிடமிருந்து பணம் எதுவும் பெறுவதில்லை என்று அந்த அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறியிருப்பதை வரவேற்கின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி மேற் கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அரசிடமிருந்து ரெலோ நிதிபெற்று வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் களான வீ.ஆனந்தசங்கரி, ந.ரவிராஜ் ஆகியோர் தெரிவித்த குற்றச்சாட்டுக் களுக்கு மறுப்புத் தெரிவித்து ரெலோத தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஒரு மறுப்பறிக்கையை வெளியிட்டி ருந்தார்.

ரெலோ மீது சுமத்தப்படுகின்ற இத்தகைய குற்றச் சாட்டுக்கள் ஆதார மற்றவை என்று அதில் அவர் தெரி வித்திருந்தார்.

அடைக்கலநாதனின் மறுப்பு அறிக்கை நேற்று உதயனில் வெளி யாகியிருந்தது.

அடைக்கலநாதனின் அந்த மறுப்பு அறிக்கையை வரவேற்று ஆனந்த சங்கரி நேற்று உதயனுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்த எல்லா ஆயுதக் குழுக்களும் அரசி டம் பணம்பெற்று வந்த விடயம் அனைவரும் அறிந்ததே. ஆனால், தற்போது அரசிடமிருந்து ரெலோ இயக்கம் பணமெதுவும் பெறுவதில்லை என அடைக்கலநாதன் உறுதியாகக் கூறியுள்ளார். நான் அவர் கருத்தை ஏற்றுக்கொள்கின்றேன். இது வரவேற் கத்தக்கதும் பாராட்டப்படக்கூடியது மாகும். ஆரோக்கியமான அரசியலுக்கு இது வழிவகுக்கும் - என்று ஆனந்த சங்கரி தெரிவித்திருக்கின்றார். (ம)

# ஏழு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம்

சம்பள உயர்வு உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து ஐக் கிய தொழிலாளர் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் நேற்று மேற்கொள் ளப்பட்டது. ஆயினும், இந்த வேலை நிறுத்தத்தினால் குறிப்பிடத்தக்க பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ரயில் சேவைகள், தபால் விநியோகம் உட பட அரசாங்க அலுவல்கள் அனைத் தும் வழமைபோல் நடைபெற்றன. இருப்பினும், மக்கள் வங்கி, இலங்கை வங்கி உட்பட ஐந்து அரசாங்க வங் கிகள் இந்த வேலை நிறுத்தத்தால் ஸ்தம்பிதமடைந்தன.

கொழும்பிலுள்ள அரசாங்க வங் கிகளின் ஊழியர்கள், தாங்கள் கடமை யாற்றும் வங்கிக் கிளைகளுக்கு முன னால் கூடிநின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நண்பகல் 12 மணியள வில் இவர்கள் அனைவரும் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் கூடினர். அங்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழி யர்கள் நேற்றுத் தங்கள் அலுவலகத துக்கு முன்னால் மறியல் போராட் டத்தை நடத்தினர்.

ஹைட்பார்க் மைதானத்தில் நடை பெற்ற கூட்டத்தில் ஐக்கிய தொழி லாளர் சம்மேளனம், சம்பள உயர்வுக் கான அரசாங்க சேவைகள் ஆணைக குழு, தேசிய சொத்துக்களை பாது காக்கும் அமைப்பு, அகில இலங்கை சமுர்த்தி முகவர்கள் சங்கம் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் உரையாற்றினா. (ம)

## பனிப்புலம் பகுதியில் மீளக்குடியமர்ந்தோருக்கு பாவனைப் பொருள்கள்

சண்டிலிப்பாய்,மார்ச்27

பனிப்புலம் கிராம அலுவலர் (ஜே/176) பிரிவில் வன்னிப் பிரதேசத் திலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர் களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் உணவுப் பொருள்கள் அல்லாத வீட்டுப்பாவனைப் பொருள் களை இன்று வியாழக்கிழமை தொல் புரம் கமநல கேந்திரநிலையத்தில் வைத்து வழங்கவுள்ளது. (எ-135)

## டிராக்டரிலிருந்து தவறிவிழுந்த பொலீஸ் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்27

ஓடிக்கொண்டிருந்த டிராக்டரில் இருந்து தூக்கி வீசப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் கழிவு நீர் வடிகாலுக்குள் வீழ்ந்து படுகாயமடைந தார். யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோ புரச் சந்திப் பகுதியில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் கடமைபுரியும் காலியைச் சேர்ந்த பிரசாத் குணவர்த் தன (வயது 29) என்பவரே படுகாய மடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (ஒ-15)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சி.லெட்சுமி பிரபாவின் அன்புத் தந்தையார்
மா.சிவசுப்பிரமணியம் செட்டியார்
அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையடைவதோடு,
அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்
*யாழ்ப்பாணம்.* (16017) செண்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

## மரண அறிவித்தல்

### சண்முகம் தங்கராஜா

சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சண்முகம் தங்கராஜா நேற்று முன்தினம் (25.03.2003) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் பார்வதி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி (ஐயாத்துரை) - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் விஜயகுலராணியின் அன்புக் கணவரும் சதீஸ் (கொழும்பு), தீபன் (ஜெசிபா ஹாட்வெயார்ஸ், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ரூபன் மற்றும் டினேஸ், மோகன்தாஸ் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் வைத்தீஸ்வரன் (பிரான்ஸ்), பரமேஸ்வரி, நாகேஸ்வரி, நகுநாதன் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), சிவநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49/1, சிறாம்பியடி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (16018)
தகவல்:
மனைவி

### அம்பாறை மாவட்ட முஸ்லிம் பகுதிகளில்

# ஈராக் போரைக் கண்டித்து நேற்றுத் துக்கதினம் வழமைநிலை பாதிப்பு; புஷ் கொடும்பாவி எரிப்பு

கல்முனை,மார்ச்27

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகளின் ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரைக் கண்டித்தும், ஈராக் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று அம்பாறை மாவட்டத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அம்பாறை முஸ்லிம் பகுதிகளில் வழமை நிலை பாதிக்கப்பட்டது. கல்முனையில் இருந்து அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில், போன்ற இடங்களுக்கான பஸ்சேவைகள் இடம்பெறவில்லை.

கல்முனைப் பகுதியில் அரச திணைக்களங்கள், காரியாலயங்கள், முஸ்லிம் பாடசாலைகள், தனியார் வங்கிகள், வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. அரச வங்கிகளில் பொது அலுவல்கள் இடம்பெறவில்லை. கல்முனை மாநகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, மாளிகைக்காடு போன்ற இடங்களில் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஜும்ஆப் பள்ளிவாசல்களில் ஈராக் மக்களுக்காக விஷேட துஆப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டணிக்கெதிரான கண்டனப்பேரணிகளும் இடம்பெற்றன. சாய்ந்தமருது, தாமரை விளையாட்டு மைதானத்தில் இருந்து கல்முனை ஸாஹிராக் கல்லூரி சந்திவரை பிரதான கண்டனப் பேரணி இடம்பெற்றது. பேரணியின் போது அமெரிக்க, பிரிட்டிஷ் தேசியக் கொடிகளும் ஜோர்ஜ் புஷ், ரொனி பிளயர் ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன. சாய்ந்தமருதில் டயர்கள் எரிக்கப்பட்டன.

கல்முனைப் பொலீஸார் பிரதான வீதிகள் மற்றும் பொது இடங்களில் தரித்து நின்று பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் வெகுஜன ஒன்றியத்தின் ஏற்பாட்டில் துக்கதின நிகழ்வுகள் நடைபெற்றன. (ம)

## துவிச்சக்கர வண்டி உரிமத் தகடுகள் சாவகச்சேரியில் விநியோகம்

சாவகச்சேரி நகரசபை இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகளை விநியோகம் செய்து வருகின்றது என நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

உரிமத் தகடுகள் பெறவிரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-31)

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மார்ச்27

ஏ-9 பாதையில் அடுத்த மாதம் 6ஆம் திகதிமுதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொதுப் போக்குவரத்து அனுமதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றுமுதல் வாரத்தில் 7 நாள்களும் காலை 7 மணி முதல் பிற்பகல 5.30 மணிவரை முகமாலை மற்றும் ஓமந்தை சோதனைச்சாவடிகள் ஊடான போக்குவரத்து அனுமதிக்கப்படும் எனவும் -

உயிலங்குளம் சோதனைச்சாவடியும் வாரத்தில் ஏழு நாள்களிலும் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)* (ஒ)

## திரைப்பட விழாவில் இன்று!

'சினி யாத்ரா' இலங்கைத் திரைப்பட விழாவில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இயக்குநர் அசோக ஹந்தகமவின் 'சந்த கின்னரி' (நிலவுப் பெண்) சிங்கள திரைப்படம் காண்பிக்கப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இயக்குநர் பிரசன்ன விதானகேயின் 'புரசந்த கலுவற' (ஓர் பூரணையில் மரணம்) என்ற திரைப்படமும் -

நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வசந்த ஒபயசேகராவின் 'தீர்த்த யாத்ரா', என்ற படமும் அன்று பிற்பகல் 2 மணிக்கு தர்மசேன பத்திராஜவின் மத்துயம் தவச (எதிர் காலத்தில் ஏதோ ஒரு நாள்) என்ற படமும் பிற்பகல் 4.30 மணிக்கு தர்மசிறி பண்டாரநாயக்கவின் 'பொன்மணி' என்ற தமிழ்மொழித் திரைப்படமும் காண்பிக்கப்படும். (ஐ)

## தனித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவது குறித்து அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தி ஆவன செய்வதாக நோர்வேத் , தூதுவர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்திடம் தெரிவித்திருக்கிறார்.

இச்சந்திப்பின்போது, புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் தொலைக்காட்சிப் பேட்டி, வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களைப் புண்படுத்தியுள்ளது எனவும் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பேச்சில் பங்குபற்றத் தேவையில்லை எனவும் பொருள்பட அப்பேட்டி அமைந்துள்ளதெனவும் முஸ்லிம் எம்.பிக்கள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கிடம் விசனம் தெரிவித்துள்ளனர். (ம)

## தலைமறைவாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மேல் நீதிமன்றம் நெப்போலியனுக்கு பிணை வழங்கும்படி யாழ்.நீதிமன்றத்துக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

நாரந்தனைத் தாக்குதல் வழக்கு இன்று யாழ்.நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவிருப்பதால், நெப்போலியன் மன்றில் ஆஜராகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

## குடாரப்பு தரையிறக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய சமாதான சூழல் எமக்கு புதிய நம்பிக்கைகளைத் தந்திருக்கிறது. போர் ஓய்ந்திருக்கின்ற இந்த சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசு எமது மக்கள் ஏற்கக் கூடிய தீர்வு ஒன்றை முன்வைத்தால் நாம் அதனை ஏற்றுக் கொள்வோம், இதன்மூலம் சமாதானம நிலைபெற வாய்ப்பு ஏற்படும் - என்றார்.

நேற்றைய நினைவுக்கல் திரை நீக்க வைபவத்தின் தொடக்கத்தில் முதன்மைச் சுடரினை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றினார். தேசியக் கொடியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை ஏற்றி வைத்தார்.

தரையிறக்கத் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த 13 போராளிகளின் நினைவுத் தூபிகளுக்கு பொன்தியாகம், கேணல் விதுஷா, செஞ்சோலைப பொறுப்பாளர் ஜனனி, தளபதி கேணல் கடாபி, மூத்த தளபதி பொட்டு அம்மான், தளபதி மணியரசன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் பானு, லெப்டினன்ட் கேணல் நகுலன், தளபதி டினேஸ் மாஸ்டர் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அரங்க நிகழ்ச்சிகள் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்றன. (ஐ-164)

## இராணுவத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2ஆம் திகதி வன்னிக்கு வந்த அன்ரன் பாலசிங்கம் 16ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்தார். அச்சமயம், பல்வேறு இராஜதந்திர செயற்பாடுகள், சந்திப்புகள் - குறிப்பாக - கிளிநொச்சியிலும் மற்றும் வன்னியில் ஏனைய இடங்களிலும் - இடம்பெற்றன.

அச்சமயமே சதி நாசவேலைத் திட்டத்தோடு ஊடுருவல் அணி ஒன்று தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவியிருப்பது பற்றிய சமிக்ஞைகளையும் தகவல்களையும் புலிகள் பெற்றுக்கொண்டதாகத் தெரிகின்றது.

இதனையடுத்து, அன்ரன் பாலசிங்கம் மற்றும் தமது இயக்கத்தின் மூத்த பிரமுகர்களின் நடமாட்டங்களை இயன்றளவு கட்டுப்படுத்திய புலிகள், அவர்களின் பாதுகாப்பை மேலும் தீவிரப்படுத்தினர்.

பல இடங்களில் இருந்தும் போராளிகள் திரட்டப்பட்டு வீதிகள் மற்றும் காடுகளின் எல்லைப் புறங்களில் நிறுத்தப்பட்டனர். பயிற்சி முகாம்களில் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த போராளிகள்கூட கேந்திரப் பகுதிகளுக்குக் கடமைக்கு அழைத்துவரப்பட்டனர். அடர்ந்த காட்டுப் பகுதிகளில்கூட சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

புலிகள் உஷாரடைந்து பரபரப்பை வெளிப்படுத்தியதும் ஊடுருவிய அணிகள் தமது முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கி இராணுவப் பிரதேசத்துக்குள் கம்பி நீட்டிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊடுருவல் அணியில் பெரும் பகுதி பின்வாங்கிவிட்டாலும் எஞ்சிய பிரிவு ஏதும் இன்னும் வன்னிக்காட்டுக்குள் நிலைகொண்டிருக்கின்றதா என்பதைக் கண்டுபிடிப்பதிலும் காட்டுப் பகுதிகள் மற்றும் மறைவிடங்களைச் சுத்தப்படுத்துவதிலும் புலிகளின் சில அணிகள் இன்னமும் மும்முரமாக இருப்பதாகவும் தெரிகின்றது.

வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையினர் நடத்திய தாக்குதல்களில் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் உயிரிழந்தது தெரிந்ததே.

புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களின் ஒருவரான கேணல் சங்கரும் இதுபோன்ற ஒரு தாக்குதலிலேயே உயிரிழந்தார். (உ)

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இப்பேச்சுக்களில் ஆராயப்படும். இலங்கை கடல் எல்லைக்குள இந்திய மீனவர்களின் அத்துமீறல், கச்சதீவுக் கடல் பிரதேசத்தில் இலங்கை - இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கும் எல்லையை நிர்ணயித்தல், இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் அமைக்கப்படவுள்ள தரைப்பாலம் ஆகியவை குறித்தே ஆராயப்படவிருக்கிறது.

இப்பேச்சுக்களின்போது இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரும் தமிழ்நாட்டில் உள்ள பிரதித் தூதுவரும் அமைச்சருடன் கலந்துகொள்வார்கள். (ம)


**LIONAIR**

**LANKA'S PRIDE IN THE SKY**

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992

(C/27007)



**பொருளியற் கல்லூரி**

யாழ்ப்பாணம் - இணுவில்

இரு இடங்களிலும்
A/L 2004, 2005
வர்த்தகப்
பிரிவு வகுப்புக்கள்
29ஆம், 30ஆம் திகதி (சனி, ஞாயிறு)கனில் நடைபெறமாட்டாது.

(15993) -நிர்வாகி.



உ
நாராயணன் துணை

**மகா விஷ்ணு சோதிடம்**

முன்னர் யாழ். பெருமாள் கோயிலடியில் (கலைப் புலவர் வீதி, தில்லையம்பலம் கடை) பணிபுரிந்த சோதிடர் S.K.இரத்தினேஸ்வரன் தற்போது 7/3, துரைராஜா வீதி, வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 27.03.2003 தொடக்கம் ஜாதகம், கைரேகை, விவாகப்பொருத்தம், வீடு, கிணறு நிலையம் பார்த்தல், திருமண ஆலோசனை ஆகியவற்றை மீண்டும் ஆரம்பிக்கிறோம் என்பதை அறியத்தருகின்றோம்.

S.K.இரத்தினேஸ்வரன்
T.P: 0777-499531 (16020)







**கவர்ச்சியான விலைக்கழிவுடன்...!**

மேசைத் தொலைபேசி, கையடக்க தொலைபேசி
எந்தப் பிரதேசத்திலும் தொடர்புகொள்ளக்கூடிய முறையில்
இணைப்புக்கள் தரப்படும்.

T.P. 071 399220
0777 242416

உங்கள் தொடர்புகளுக்கு:

**பவர் செலுலர்**

(வின்சர் தியேட்டருக்கு முன்பாக நியூ லலிதா கட்டடம்)
இல.185, கஸ்தூரியார் வீதி, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்.

(16008)


## கண்ணீர் அஞ்சலி



தமது ஏக புத்திரி

**செல்வி ஸ்ரீதரன் குவலயா**

(தரம் 9 மாணவி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியிருக்கும் எமது சக ஊழியர்

**சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்**

அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதோடு செல்வி குவலயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'உதயன்' பணிமனை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
சக ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

**செல்வி குவலயா ஸ்ரீதரன்**

(தரம் 9 மாணவி,யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த செல்வி குவலயா ஸ்ரீதரன் இறைபதமெய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசையா(உபதபாலதிபர்) - இரத்தினம்மா தம்பதிகளினதும் காலஞ்சென்ற அத்தியடி மயில்வாகனம் - வாலாம்பிகை தம்பதிகளினதும் பேர்த்தியும் ஸ்ரீதரன்(சிவநெறிப்புலவர் - வில்லிசைக் கலைஞர்) - சத்தியபாமா தம்பதிகளின் செல்வப்புதல்வியும் நிதர்சனின் (யாழ். கொக்குவில் இந்து மாணவன்) சகோதரியுமாவார்.

இவரது நெறிக்கிரியைகள் இன்று (27.03.2003) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் தட்டாதெரு, மதவடி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1029/3,மதவடி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(C/27017)

தகவல்:
இராசையா ஸ்ரீதரன் (தகப்பன்),
ஸ்ரீ.நிதர்சன்(சகோதரன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.